895

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

895
131.
1692

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

இந்த இதழில்

தொழிலாளர்கள் குறைந்த பட்சச் சம்பளச் சட்டம் அமுல்

ஜீவ பலித்தடைச் சட்டம்

மற்ற புதிய சட்டங்கள்

விற்பனை வரித்திருத்தம்

கரும்பு செஸ்

வெல்ல விலை நிர்ணயம்

பனை வெல்லம்

சரக்கு சப்ளை—விலை அவசரச் சட்ட நடவடிக்கைகள்

வழக்கும்—தீர்ப்பும்

கேள்வி—பதில்

விபரங்கள் உள்ளே பார்க்கவும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1951
MADRAS

THE "VAKIL" ~ ஜனவரி-1951 ~ 4 அணா

"வக்கீல்"

(சந்தா விபரம்)

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத
சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ ஐயங்கார், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L., (ஆசிரியர்)

சந்தா விபரம்

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு	ரூ. 3—0—0
விஷேச வருட சந்தா	ரூ. 5—0—0
(12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்களுக்குமாக)	
ஷை வெளிநாடு	ரூ. 10—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 : கும்பகோணம்

"வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப்பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப்பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

(1) வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

(2) சந்தாத்தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 : கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்

(3) மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

(4) சிலோன் நேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 5—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

(5) வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம்

"வக்கீல்" பிரசுரங்கள்

1.	தொழிற்சாலைச் சட்டமும் — விதிகளும் [கமலை 20-ன் படி சுருக்கம்] அச்சிலிருப்பது	ரூ. 0—8—0
2.	வாடகைச் சட்டம்	ரூ. 1—8—0
3.	விற்பனை வரி	ரூ. 2—0—0
4.	விவசாயிகள் கடன் நிவாரண சட்டம் (புதிய ஒத்தி திருத்தம் உள்பட)	ரூ. 0—12—0

தபால்சார்ஜ் பிரத்தியேகம்

மற்ற முக்கிய பிரசுரங்களை எதிர்பார்க்கவும்!

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)

புதிய 1951 மாடல்
பிலிப்ஸ் ரேடியோ
செட்டுகள் மலிவான விலையில் கிடைக்கும்.
உரிமையாளர்:—
மாடர்ன் ரேடியோஸ்
பெரிய தெரு, :: கும்பகோணம்.
எங்களிடம் பல்பு, எலக்டிரிக் விசிறி, மற்ற எல்லாவகை எலக்டிரிக் சாமான்களும் விலை சகாயமாயும், ஒலிபெருக்கி வாடகைக்கும், விலைக்கும் கிடைக்கும்.

ஸ்தாபிதம் 1942 — தந்தி "லலிதாலய"
உயர்தர ஆயுர்வேத சிகித்ஸைக்கும் மருந்துக்கும்
லலிதா பார்மஸி
ஆயுர்வேத வைத்தியசாலை
கும்பகோணம்.
ஹெட் ஆபீஸ் 49, மூர்த்தி செட்டித் தெரு. — பிராஞ்சு 73, பக்தபுரி அக்ரஹாரம்.
விசேஷ தயாரிப்பு
நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

அழகும் தெளிவும் உறுதியும் உடைய படம் எடுத்துக்கொள்ள இன்றே
ராஜு போட்டோ ஸ்டுடியோ
செல்வீர்
நாகேஸ்வரர் வடக்குவீதி, கும்பகோணம்.
Pro:- A. Raju.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 ஜனவரி 1951 இதழ் 1

பொருள் அடக்கம்

பக்கம்

குறிப்புகள் 3

புதிய சட்டங்கள்
சுருக்கியும்—வரிசையாகவும் 4

வரிகள்
விற்பனை வரி விதிகள் திருத்தம் 6
கரும்பு வரி (cess) 6

அயல்நாடுகளில்
நீதி வழங்குவது பகிரங்கமாக இருக்கவேண்டும் 6

வழக்கும்-தீர்ப்பும்
(1) சர்வ சுதந்திரத்துடன் சொத்துக்களை உயில் மூலம் அடைந்தவர் அவைகளை விற்கக் கூடாதென்று அதே உயில் மூலம் தடுக்கப்பட்டிருந்தால் 8
(2) லஞ்சம் வாங்குவதற்காகப் பொய்க் கணக்கு ஜோடித்த உதவி இன்ஜினியரும் கண்ட்ராக்டரும் 10

கேள்வி-பதில் 14

தொழிலாளர் பகுதி
குறைந்தபட்ச சம்பளச் சட்டம் 18

கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன்
விலை நிர்ணயம் — இதர சர்க்கார் அறிக்கைகள். 22

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187703
சென்னை 600 008

ஜாதகம்! ★ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—
தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ
தெப்பக்குளம் P. O., திருச்சி.

"எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10
தபால் செலவு பிரத்தியேகம்
ஆயுர்வேத வைத்தியர்
T. V. ஜெயராம சாஸ்திரிகள்,
வீரராகவ வைத்திய சாலா,
ஸ்ரீரங்கம் P. O., S. I.

உங்கள் எதிர் கால

குடும்ப சேமிப்பு வயோதிகத்தில் சுதந்திரம்

இவைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் அவசியம். நீங்கள் இன்ஷ்யூர் செய்துகொண்டீர்களா?

மிக குறைந்த சந்தாவில் நிறைந்த பாதுகாப்புள்ள பாலிஸிகளை அளிக்கிறோம்.

இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ள விரும்புவோரும்,
ஏஜன்ஸி எடுத்துக்கொள்ள விரும்புவோரும்,

விபரத்திற்கு:— பிராஞ்சு செக்ரெட்டரி
தி பெடரல் இந்தியா அஷ்யூரன்ஸ் கோ., லிமிடெட்.
No. 7, சக்திவீரப்பன் கோவில் தெரு,
தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினாப்பள்ளி.
என்ற விலாசத்திற்கு எழுதவும்

"சக்தி ஆரூடம்"!

ஸ்ரீ K. R. அப்பாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்ஸிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

1 to 3 ஆரூட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7—8—0.

வி. பி. பி. தனி,
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.
N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P.O (S. I.)

தாகசாந்தி! மன இன்பம்!!

நீங்கள் அருந்தும் ஒவ்வொரு துளியிலும் அமிர்தம் போன்ற சுவையைக் காண்பீர்கள்! உயர்ந்த முறையில் தயாரித்துள்ள ஷர்பத் பான வகைகள் விலை நயம். அன்பர்கள் யாவரும் விஜயம் செய்யுங்கள்!

பாம்பே ஐஸ் கூலிங் அண்டு ஷர்பத் கம்பெனி
103, பெரியதெரு, :: கும்பகோணம்.

Victory MEANS QUALITY CONFECTIONERY
THE VICTORY CONFECTIONERY WORKS
KUMBAKONAM

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 ஜனவரி 1951 இதழ் 1

குறிப்புகள்.

சென்ற ஆண்டு. —சென்ற ஆண்டு போனால் போகட்டும். ஆனால் அது போகும்போது ஏன் தன்னுடன் நமது உயிரின் உயிரை நமது மதிப்பிலா மாணிக்கத்தை, நமக்காக ஓர் அரண்மனையைக் கட்டி அதில் (குடி) அரசாகிய நம்மை ஊன்றிவைத்த ஓர் சிற்பியை, நமது வீர சர்தாரை, நமது வல்லபாய் பட்டேலை, தன்னுடன் கொள்ளை கொண்டு போயிற்று? இந்த "இரும்பு மனிதர்" இல்லா விட்டால் நமது அன்றாட வாழ்க்கையே பாதிக்கப் பட்டிருக்குமே! பாரத நாடு அறநூறுக்கு மேர்பட்ட ராஜ்யங்களாக, சுதந்தர ஜில்லாக்களாகத் தோன்றி இருக்குமே! மறுபடியும் அயல் நாட்டு வல்லூறுகள் இந்திய வானத்தில் வட்டமிட ஆரம்பித்திருக்குமே! பிஸ்மார்க் என்ற ஓர் ஜர்மனியா பத்துப் பதினைந்து ராஜ்யங்களை ஓர் தலைமுறையில் ஒன்றுசேர்த்து நவீன ஜர்மனியை ஏற்படுத்தினார். நமது சர்தாரோ அறநூறுக்கு மேற்பட்ட முடியரசுகளை கொடியில் மறைத்து, அவர்களின் ராஜ்யங்களை ஒன்று சேர்த்து, உலகிலேயே மகா வல்லமை உள்ள ஓர் இந்தியாவை அல்லவா சிருஷ்டித்தார்! சர்தாரின் ஆத்மா என்றும் நம்மைக் காத்து அருள் புரியுமாக!

புது ஆண்டு. —"வக்கீல்" பத்திரிகையின் மூன்றாவது மலர் இந்த இதழ் முதல் ஆரம்பமாகின்றது. இச்சந்தர்ப்பத்தில் "வக்கீல்" பத்திரிகைக்குப் பேராதரவு அளித்து வரும் பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கு "வக்கீலி'ன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வருங்காலத்தில் "வக்கீல்" அன்பர்கள் சட்டபடிக்கான தங்கள் தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் நன்கு உணர்ந்து இந்தியக் குடியரசின் சுதந்திரப் பிரஜைகளாக விளங்கவேண்டுமென்ற எங்கள் புத்தாண்டு வாழ்த்துச்செய்தியை அங்கீகரிக்குமாறு அன்பர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

எங்கள் நன்றி. –இச்சந்தர்ப்பத்தில் "வக்கீல்" பத்திரிகையின் தொண்டை மெச்சியும் ஆசி கூறியும் தினந்தோறும் வந்து கொண்டிருக்கும் கடிதங்களை எழுதி எங்களுக்கு ஊக்கமளிக்கும் நண்பர்களுக்கும் எங்கள் நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம். கடல் கடந்து வசிக்கும் பல தமிழ் அன்பர்களின் கவனத்தையும் "வக்கீல்" கவர்ந்து வருவதில் பெருமை அடைகிறோம். தமிழர் இருக்கும் இடங்கள் எல்லாம் தமிழ்நாடே.

அன்பர்களின் இரண்டொரு கடிதங்களை மட்டில் மாதிரிக்காக இங்கே கொடுத்திருக்கிறோம். மலாயா அன்பர் திரு. V. ரங்கசாமி அவர்கள் எழுதுகிறார்:—"உயர் திரு. ஆசிரியர் அவர்களுக்கு, நான் "வக்கீல்" பத்திரிகையைச் சமீபத்தில்தான் பார்க்க நேர்ந்தது. இத்தன்மையான பத்திரிகை மக்களுக்கு மகத்தான நன்மை பயக்கு மென்பதில் சந்தேக மில்லை. நம் நாட்டைத் தவிர மேனாடுகளில் அரசியல் விஷயங்களையும் சட்ட திட்டங்களையும் அறியும் வசதி இருக்கிறது. நம் நாட்டில் அதைப் பூர்த்தி செய்ய, தங்கள் "வக்கீல்" தோன்றியது மிகவும் போற்றுதற்கும் புகழுதற்கும் உரிய விஷயமாகும். இதனால் தாங்களும் தங்கள் குழுவினர்களும் மக்களுக்கு மகத்தான சேவை செய்தவர்களாவீர்கள்."

இராசிபுரம் திரு. குஞ்சப்பா அவர்கள் எழுதுகிறார்:- "வக்கீல்" 1950 டிசம்பர் மாத வெளியீட்டைப் பார்த்தேன். பார்த்து மனம் பூரிப்படைவதோடு பொதுமக்களுக்குச் சட்டம் என்பது எது என்று இருந்தவர்கள் கண்முன் சட்டத்தை எளிய தமிழில் விளக்கி, பொது ஜனத்தோழனாகத் தென் இந்தியா எங்கும் மூலை முடுக்குகளிலும் தோன்றி "வக்கீல்" பணி புரியும் என்று நம்புகிறோம். வாழ்க "வக்கீல்!" பரவுக அதன் தொண்டு!

சத்தியமங்கலம் ஜனாப் சையத்து மூர்தாஜா அவர்கள் எழுதுகிறார் :-"மாதா மாதம் "வக்கீல்" பத்திரிகையைப் படித்து உள்ளம் பூரிக்கும் "வக்கீல்" பத்திரிகை அபிமானிகளில் நான் ஒருவன்............"

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1950ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்செட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாக சொல்லப்பட்டன]

62 ஆவது (மத்திய) சட்டம் (2—12—1950) The Allianz and Stuttgarter Life Insurance Bank Transfer Act 1950. அலையன்ஸ் அண்ட் ஸ்டட் கார்டர் என்ற ஜெர்மன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தை யுத்தகாலம் முதல் இந்திய சர்க்கார் அதிகாரியே நடத்தி வந்தார். அக்கம்பெனியின் சொத்துக்களும் லாப நஷ்டங்களும் சென்னை யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு இச்சட்டத்தால் மாற்றப் படுகின்றன.

63 ஆவது (மத்திய) சட்டம் (2—12—1950) The Ajmer Tenancy And Land Records Amendment Act— அஜ்மீர் குடிவார பாத்திய சட்டத்திருத்தம்.

மத்திய (அவசர) சட்டங்கள்

1950-ஆம் வருடத்திய 31 ஆவது மத்திய அவசரச் சட்டம் (Ordinance 31 of 1950) 8—11—1950.

கண்ட்ரோல் சட்டத் திருத்தம்:

சர்க்காருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் (கண்ட்ரோல்) கட்டுப்பாடு உத்தரவுகள் பிறப்பிக்க அதிகாரமளிக்கும் சட்டம். 1946ஆம் வருடத்திய அத்தியாவசியப் பண்டங்கள் சப்ளை, தாற்காலிக அதிகாரச் சட்டம். (The Essential Supplies Temporary powers Act, 1946.) இச்சட்டத்தின் 3-ஆவது செக்ஷனில் மத்திய சர்க்கார் எவ்வித 'கண்ட்ரோல்' உத்தரவும் பிறப்பிக்கலாமென்றும், ஆனால் அவ்வித உத்தரவுகள் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட வேண்டுமென்று மிருக்கிறது. இந்த அதிகாரத்தை வேறு அதிகாரிகளும் செலுத்தும்படி மாற்ற மத்திய சர்க்காருக்கு உரிமை உண்டு. இவ்விதம் அதிகாரம் அடைந்த மற்ற அதிகாரிகளும் 'கண்ட்ரோல்' உத்தரவுகள் பிறப்பிக்கலாம். அந்த உத்தரவுகளும் சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப்பட வேண்டும். இப்பொழுது கெஜட் பிரசுரம் சம்பந்தமாக இச்சட்ட ஷரத்து, ஒரு மத்திய அவசரச் சட்டத்தால், திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது:—பல நபர்களைப் பாதிக்கக் கூடிய அல்லது பொதுவாக உள்ள கட்டுப்பாடு (கண்ட்ரோல்) உத்தரவுகள் மட்டில் சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்றும்; ஒரு தனி நபரைக் குறித்துச் செய்யப்படும் கட்டுப்பாடு உத்தரவு அந்தத் தனி நபரிடம் கொடுக்கப்பட்டாலும், அல்லது அனுப்பப்பட்டாலும் அல்லது அத்தனி நபர் வசிக்கும் வீட்டின் வெளிக் கதவிலோ வேறு தெரியும்படியான இடத்திலோ ஒட்டினாலும் போதுமென்றும்—திருத்தப்பட்டிருக்கிறது. பார்லிமெண்ட் கூடாத சமயத்தில் ஜனாதிபதி அவர்களால் இத்திருத்தம் 8—11—1950ல் பிரகடனம் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டத்தின் (ordinance) மூலம் செய்யப்பட்டிருக்கிறது.

1950-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னை-சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்கெட்டில் கொடுக்கப் பட்டிருக்கும் தேதி அச்சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப் பட்டன.]

28 ஆவது (சென்னை) சட்டம் (21—11—1950) The Madras Elementary Education Amendment Act 1950 சென்னை ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்தம். ஆரம்பக் கல்விக்காக முனிசிபாலிட்டிகளும் ஜில்லா போர்டுகளும் பிரத்தியேக வரி விதிக்கும் முறையைப் பற்றியும், சர்க்காரால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளைப் பற்றியும் சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது.

29 ஆவது (சென்னை) சட்டம் (21—11—1950) The Madras Land Encroachment - Amendment Act, 1950. சென்னை நில ஆக்கிரமிப்புச் சட்டத் திருத்தம். சர்க்கார் நிலங்களை ஒருவர் ஆக்கிரமித்தால், அவரை அதனினின்று அகற்றுவதற்காக ஏற்பட்டிருக்கும் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது சர்க்கார் நிலங்களை ஒருவர் குத்தகைக்கு ஒப்புக் கொண்டு அனுபவித்து வந்து கெடுமுடிந்த பிறகு அந்நிலங்களைச் சர்க்காரிடம் விடாமல் வைத்துக்கொண்டிருந்தாலும்; சர்க்கார் தாமே திருப்பி எடுத்துக் கொள்வதாய் முடிவு செய்த (resumed) இனம் அல்லது மானியங்களை ஒருவர் சர்க்காரிடம் விடாமல் வைத்துக் கொண்டிருந்தாலும், இனி இவர்கள் மீது நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் ஷரத்துக்களையே உபயோகித்து சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று அச்சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

30 ஆவது (சென்னை) சட்டம் (29—11—1950) (The Madras Preservation of Private Forests Amendment Act, 1950) சொந்தக்காடுகளை பாதுகாப்பதைக் குறித்த சட்டம், 1949ல் இயற்றப்பட்டது. அது 2-12-1950 தேதியுடன் அமுல் இழந்து விடும்படி இருந்த ஷரத்தைத் திருத்தி, 2-12-1951 வரை அச்சட்டம் அமுலில் இருக்கும்படி திருத்தப் பட்டிருக்கிறது.

31 ஆவது (சென்னை) சட்டம் (12—12—1950) The Madras Prohibition Amendment Act, 1950) மதுவிலக்குச்சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது. 5ஆவது செக்ஷனில் ஸ்பிரிட் சம்பந்தமான எவ்வித ஆகார சாமான்களைச் செய்வதும் வைத்திருப்பதும் குற்றமாக்கப் பட்டிருக்கிறது.

32 ஆவது (சென்னை) சட்டம் (19—12—1950) (The Madras Animals and Birds Sacrifices Prohibition Act, 1950) ஹிந்து கோயில்களில் ஜீவ பலித்தடைச்சட்டம். ஹிந்து கோயில்களுக்குள்ளோ, அருகாமையிலோ, தேரடியிலோ எவரும் தெய்வத்திற்குப் படைக்கும் எண்ணத்துடன் எவ்விதமான கால்நடைகளையும் பறவைகளையும் பலியிடுவதும், வெட்டி ஊனப் படுத்துவதும் குற்ற மாக்கப் பட்டிருகிறது. அவ்விதம் பலியிடுவதை ஒருவர் ஏற்றுக் கொண்டு செய்வதும், அதற்கு உதவி செய்வதும் குற்றம்தான். தம் சுவாதீனத்தில் இருக்கும் இடத்தை இவ்விதம் பலியிடும் இடமாகக் கொடுப்பதும் குற்றம்தான். இவ்விதகுற்றங்களுக்கு ரூ. 300 வரை அபராதம் விதிக்கப் படலாம். குற்றம் செய்பவர் கோயில் உத்தியோகஸ்தர், டிரஸ்டி, சிப்பந்தி, பூசாரி அல்லது கோயிலில் வரும்படி அடைய பாத்தியமுள்ள எவராக இருந்தாலும், தெரிந்து பலியிட தம் இடத்தைக் கொடுப்பவருக்கும், 3 மாதம்வரை சிறை தண்டனை அல்லது ரூ. 300 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இச்சட்டப்படி குற்றங்களை பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்களும் முதல் அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்களும் தான் விசாரிக்கலாம். சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டாலும் எந்தத் தேதி முதல் அமுலுக்கு வரும் என்று சென்னை சர்க்காரால் குறிப்பிடப்படும்.

லால் மோஹன் ஷாஹாவின்
இந்தியாவின் மிகச் சிறந்த

TRADE MARK

அற்புதமான மருந்துகள்
சருமக் களிம்புகள்

கந்துதாவனல் *CDL/123*
சொறி சிரங்குகள், வெட்டுக்காயங்கள், சூட்டுப்புண்கள், கட்டிகள், கொப்புளங்கள், ரணக்கட்டிகள் ஆகியவைகட்கு

சர்வதாத்ருஹூதஸான் *CDL/72*
சகல சரும உபாதைகளுக்கும் படை, தலைச்சுண்டு, தலைத்தோல் உரிதல், கட்டிகள் முதலியனவும் சொறியும் எரிச்சலும்

மருந்து பட்டவுடன் மறைகின்றன.

ஸூலகூன் CDL|75

தலைவலி, பல்வலி அல்லது மற்ற எந்த வலிக்கும் யாவரும் அறிந்த உடனடியான நிரந்தர குணம் நிச்சயம். ஒருமுறை பரீக்ஷியுங்கள்.

L. M. SHAHA, SANKHANIDHI & CO. LTD.,
32, E. JACKSON LANE, CALCUTTA.

வரிகள்

விற்பனை வரி விதிகள் - திருத்தம்:—

சென்னை விற்பனை வரி விதிகளின் (The Madras General Sales Tax Rules 1939) 8-ஆவது விதி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. விற்பனை வரிச் சட்டத்தின்படி லைசென்சு வாங்கிக்கொண்டு வியாபாரம் செய்யும் வியாபாரிகள், அச்சட்டத்தின் எந்த ஷரத்தை மீறினலும் அல்லது விதிகளின் ஷரத்துக்களை மீறினலும், அல்லது அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் லைசென்சில் கண்ட நிபந்தனைகளை மீறினலும், அவ்வியாபாரியின் லைசென்சை ரத்து செய்ய விற்பனை வரி அதிகாரிக்கு 8-ஆவது விதிப்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இப்பொழுது கீழ்க்கண்ட நிபந்தனையும் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது ஒரு வியாபாரியின் லைசென்சு மேற்கண்ட விதம் ரத்து செய்யப்பட்டால், அதே வருடத்திற்கு அவருக்குப் புது லைசென்சு கொடுக்கப்பட மாட்டாது. ஆனல் பிந்திய வருடங்களுக்கு அதே வியாபாரிக்கு லைசென்சு கொடுக்கலாம் என்று சேர்க்கப் பட்டிருக்கிறது.

[5-12-1950-சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I-பக்கம் 502]

கரும்பு வரி (Cess) சில ஜில்லாக்களுக்கு மட்டில்:—

1949-ஆம் வருடத்திய சென்னை - (ஜீனி) சர்க்கரைத் தொழிற்சாலைக் கட்டுப்பாடு சட்டத்தின் (The Madras Sugar Factories Control Act 1949) 14-ஆவது செக்ஷன்படி எந்தக் குறிப்பிட்ட இடங்களிலும் கொண்டுவரப்படும் கரும்புக்கு ஒரு கட்டணம் (செஸ்) விதிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட 'செஸ்' வரி ஒரு ஸ்டாண்டர்ட் மணங்குக்கு நாலு அணவுக்குமேல் இருக்கக்கூடாது. இந்த அதிகாரத்தை உபயோகித்து, சர்க்காரால் சில ஜில்லாக்களில் கரும்பு 'செஸ்' வரி இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, செங்கற்பட்டு, தஞ்சாவூர் இந்த ஜில்லாக்களிலும், ஆந்திர தேசத்தில் ஸ்ரீகாகுளம், விசாகப்பட்டினம், கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, கிருஷ்ணு, பல்லாரி இந்த ஜில்லாக்களிலும் ஜீனி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குள் கொண்டுவரப்படும் எவ்விதக்கரும்புக்கும், டன் ஒன்றுக்குஅணு 8-வீதம் 'செஸ்' கட்டணம் வசூல் செய்யப்படும்.

(குறிப்பு:—இந்த 'செஸ்' கட்டணம் யாரிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டுமென்றும், யாரால் எப்படி வசூல் செய்யப்பட வேண்டுமென்றும், சர்க்காரால் விதிகள் ஏற்படுத்துவதற்கும், 'செஸ்' கட்டணத்தைக் கிஸ்திப் பாக்கியைப் போல் வசூல் செய்யவும் இச்சட்டம் அதிகாரமளிக்கின்றது.)

[23-11-1950-சென்னை—சர்க்கார் கெஜட்—பாகம் II-விசேஷ வெளியீடு.]

அயல் நாடுகளில்

நீதி வழங்குவது பகிரங்கமாக இருக்க வேண்டும்.

ஆங்கிலேயர்களின் நீதி பரிபாலன முறையின் அடிப்படையான கொள்கைகளில் ஒன்று என்னவென்றல்:—"நீதி வழங்குவது பகிரங்கமாக இருக்க வேண்டும்" என்பது. அதாவது ஒரு நீதிபதி எந்த வழக்கை விசாரிப்பதும் அதில் தமது தீர்ப்பை அளிப்பதும் எல்லாம் பகிரங்கமாகவே நடத்தப்படவேண்டும். பொதுமக்கள் விரும்பினல் எவரும் வழக்கு விசாரணை நடக்கும் இடத்திற்குப்போய் அதைக் கவனிக்க உரிமை உண்டு. பொதுமக்கள் இஷ்டப்படி சுதந்தரமாகப் போக முடியாத இடத்தில் நடக்கும் விசாரணையும் தீர்ப்பும் செல்லா. உதாரணமாக ஒரு வழக்கைக் கவனிப்போம். கனடாவில் நடந்த அப்பீல் பிரிவிகவுன்சிலில் 1936ல் நடந்தது. இருந்தாலும் அதை ஆதாரமாகக் கொண்டு சமீபத்தில் நமது ஹைகோர்டில் சில

தீர்ப்புகள் ஏற்பட்டிருப்பதால், இந்த ஆங்கிலேய வழக்கின் விவரத்தைத் தெரிந்து கொள்ளுவோம்.

மாக்பர்சன் என்ற ஓர் கனடா தேசத்தவர் விவாக ரத்து கோரி, கோர்ட்டில் மனுச் செய்து கொண்டார். எதிர்க்கட்சிக்காரராகிய அவருடைய மனைவி அவ்வழக்கில் கக்ஷியாடவே வரவில்லை. 'எக்ஸ்பார்ட்டி'யாக இருந்து விட்டாள். இருந்தாலும் மனுதாரையும் அவருடைய சாக்ஷிகளையும் விசாரித்துத்தான் சட்டப்படி விவாக ரத்துச் செய்யப்படவேண்டும். இதற்காக மனுதாரரையும் அவருடைய இரண்டு சாக்ஷிகளையும் நீதிபதி விசாரணை செய்தார். ஆனால் எல்லா வழக்குகளையும் விசாரிக்கும் பகிரங்க அறையில் (Public Court) விசாரிக்கவில்லை. காலைக் கோர்ட் கலைந்ததும் மாலையில் கோர்ட் ஆரம்பிக்கு முன் ஒரு இடைவேளை உண்டு. இதைச் 'சிற்றுண்டி இடைவேளை' என்று சொல்வது. அந்த இடைவேளையில்தான் நீதிபதி இவ்வழக்கை வேறு ஒரு அறையில் விசாரித்தார். சட்ட புத்தகங்கள் வைக்கப் பட்டிருக்கும் 'லைப்ரரி' அறையில் விசாரணை செய்தார். இதுவும் கோர்ட் கட்டடத்தின் ஓர் பாகம்தான். ஆனால் எப்பொழுதும் பகிரங்கமாகக் கோர்ட் நடத்தும் இடமல்ல. வழக்கை இப்படி வேறு ஒரு அறையில் விசாரிக்கும் போது, நீதிபதிகள் கோர்ட் நடத்தும் சமயங்களில் அணிந்து கொள்ள வேண்டிய ஆடைகளை அந்நீதிபதி அணிந்து கொள்ள வில்லை. மனுதாரின் வக்கீலும் பகிரங்கக் கோர்ட்டில் அணிந்து கொள்ளும் உடையுடன் இல்லை. இருந்தாலும், நீதிபதி இவ்வழக்கை விசாரிக்க ஆரம்பிக்குமுன் 'நான் பகிரங்கமாகவே (Open Court) இதை இங்கு விசாரிக்கின்றேன்' என்று மட்டில் சொன்னார். நீதிபதி இப்படி இவ் வழக்கை விசாரணை செய்த இடம் பொது மக்கள் நடமாடும் அக்கோர்ட் கட்டடத்தின் ஓர் தாழ்வாரத்திற்கு ஒட்டினால் போல்தான் இருந்தது. இந்தத் தாழ்வாரத்திலிருந்து பொது ஜனங்கள் எவரும் வழக்கு விசாரணை நடந்த அறைக்குப் போகலாம். தடை ஒன்றுமில்லை. இரண்டு பக்கமும் திறக்கக் கூடிய இரண்டு கதவுகள் இருந்தன. என்றாலும் இவை இரண்டும் தாழ்ப்பாள் போடப்பட்டு மூடிவைக்கப் படவுமில்லை. ஒரு கதவு மட்டில்தான் தாழ்ப்பாள் போடப் பட்டிருந்தது. மற்றொன்று திறந்தே இருந்தது. இந்தத் திறந்திருந்த கதவின் மூலம் எவரும் உள்ளே தாராளமாகப் போகத் தடை எதுவுமில்லை. என்றாலும் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்த கதவின் மேல், ஓர் பித்தளைத் தகட்டில் "சொந்த அறை" (private) என்று மட்டில் எழுதப்பட்டிருந்தது. இவ்விதம் எழுதப் பட்டிருந்தது அந்தச்சமயத்தில் வழக்கை உள்ளே விசாரித்த நீதிபதிக்கு ஞாபகம் வரவில்லை போலும். உள்ளே லைப்ரரி அறையில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு நீதிபதியால் தீர்ப்பும் அளிக்கப்பட்டது. அவ்வழக்கில் நீதிபதி செய்த விசாரணையும், அளித்த தீர்ப்பும் செல்லத் தக்கதில்லை என்று பிரிவி கவுன்சிலில் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். ஒரு கதவு திறந்திருந்தது உண்மை; பொதுமக்கள் உள்ளே வந்து வழக்கு விசாரணையைக் கவனிப்பதை எவரும் தடுக்கவில்லை என்பதும் சரி; இருந்தாலும் மற்றொரு கதவின்பேரில் "சொந்த அறை" என்று எழுதப் பட்டிருந்த பலகை எடுக்கப்படாமலிருந்ததால் அது பொது மக்களை உள்ளே போகக்கூடாதென்று தடை செய்வது போல்தான் ஆகுமென்றும், எந்தப் பிரஜையும் ஓர் நீதிபதி எந்த வழக்கை விசாரிக்கும் போதும் அந்த இடத்திற்குப் போய், அதைக் கவனிக்க உரிமை உண்டு என்றும்; இந்த உரிமை மறுக்கப் படும் இடங்களில் நடக்கும் விசாரணையே செல்லாதென்பது ஆங்கிலேயரின் நீதிபரிபாலன முறையின் ஓர் அடிப்படையான கொள்கை என்றும் உயர் நீதிபதி லார்ட் பிளானஸ்பரோ இது சம்மந்தமான சட்டத்தை விளக்கி இருக்கின்றார், (1936 அப்பீல் கேஸஸ் 177)

இந்தியாவிலும் இதுவேதான் சட்டம். இது சம்பந்தமாய்ச் சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளிலும் இந்த அடிப்படையான கொள்கை வற்புறுத்தப் பட்டிருக்கிறது. குற்றங்களைக் குறித்த வழக்குமுறைச் சட்டத்தின் (Criminal procedure code) 352 ஆவது செக்ஷனிலும் கிரிமினல் வழக்குகள் விசாரிக்கப்படும் இடங்கள் பகிரங்க நீதிஸ்தலங்களாகவே (Open Court) பாவிக்கப்பட வேண்டுமென்றும், இடம் உள்ள வரை சாதாரணமாய்ப் பொதுமக்கள் அங்கே போய்வர உரிமை உண்டென்றும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் நமது சட்டப்படி நீதிபதிக்கு ஒரு உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட வழக்கை விசாரிக்கும் நீதிபதி அவசியமானால், எந்தச் சமயத்திலும், பொது ஜனங்களையோ, ஒரு குறிப்பிட்ட நபரையோ அங்கே வரக்கூடாதென்று தடுக்கலாம். ஆனால் விதி விலக்காகவே, இந்த உரிமை நீதிபதிக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

"சர்வசுதந்திரத்துடன்" சொத்துக்களை உயில் மூலம் அடைந்தவர், அவைகளை விற்கக் கூடாதென்று அதே உயில் மூலம் தடுக்கப்பட்டிருந்தால் அவருடைய உரிமை என்ன?

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: கனம் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள்.

ஆதாரம்: 1950 (2) மதராஸ் லா ஜர்னல் 496.

ஒருவர் தம்முடைய சொத்துக்களைத் தம்முடைய ஆயுளுக்குப் பின் யார் யார் எவ்விதம் அடைய வேண்டுமென்று எழுத்து மூலம் செய்து வைக்கும் ஏற்பாட்டுக்கு "உயில்" (Will) என்று பெயர். இதை மரண சாசனம் என்றும் சொல்வதுண்டு. வாய் மொழி 'உயில்' இப்பொழுது செல்லாது. மேலும் உயிலில் அதை எழுதி வைப்பவருடைய கையெழுத்து (அல்லது ரேகையும்) குறைந்தது இரண்டு சாட்சிகளுடைய சாட்சிக் கையெழுத்துக்களும் இருக்கவேண்டும். இவ்விதம் இல்லாத "உயில்"கள் செல்லாது. இவ்விதம் இருக்கும் "உயில்"கள் எல்லாம் சரியானவை என்றும் சொல்ல முடியாது. "உயில்" எழுதி வைப்பவர் நல்ல ஞாபக சக்தியுடனும் சுய அறிவுடனும் இருக்கும் போது "உயில்" எழுதி வைக்கப்பட்டிருக்கிறதென்று ருசுவாக வேண்டும். இவ்விதம் உயிலைப்பற்றிய சில விசேஷ விதிகள் இருக்கின்றன.

அத்துடன் நிற்க இல்லை. "உயில்" தஸ்தவேஜுகளில் உபயோகிக்கப்படும் சொற்களாலும் வாக்கியங்களாலும் ஏற்படும் வழக்குகள் பல. உயில் எழுதி வைப்பவருடைய எண்ணங்கள் என்ன என்று கண்டு பிடிப்பதே சில சமயங்களில் கஷ்டமாகிவிடும். அப்படி அவர் எண்ணங்கள் என்ன என்று ஒருவாறு தெரிந்து கொள்ள முடிந்தாலும், அந்த எண்ணங்கள், அவருடைய உயிலில் உபயோகிக்கப்படும் சொற்களாலும் வாசகங்களாலும் நிறை வேறாமல் போய்விடுவதுமுண்டு.

இதற்குத் தகுந்த உதாரணம் இவ்வழக்கில் வரும் வைத்தியலிங்கம் பிள்ளை 1915ல் தம் சொத்துக்களைக் குறித்து எழுதி வைத்த உயில். அந்த உயில் மூலம் அவர் தம் சொத்துக்களைத் தம்முடைய பெண் காத்தாயிக்குக் கொடுத்தார். உயிலின் வெவ்வேறு இடங்களில் இருப்பவை:- "என் ஆயுளுக்குப் பிறகு என்னுடைய யாவத்து ஸ்தாவர ஜங்கம சொத்துக்களையும் என் மகள் காத்தாயி சர்வ சுதந்திரத்துடன் அடைய வேண்டியது. மேலே கண்ட அடமானக் கடனை நான் உயிருடன் இருக்கும்போதே தீர்க்காவிட்டால், அக்கடனைக் காத்தாயியே தீர்க்க வேண்டியது".... "என் ஆயுளுக்குப் பிறகு இச் சொத்துக்களைக் காத்தாயியே சர்வ சுதந்தரத்துடன் அடைய வேண்டியது. அவளுடைய ஆயுளுக்குப் பின் அச் சொத்துக்களை அவளுடைய பேரன் ராமசாமி அடைய வேண்டியது".... "என் ஆயுளுக்குப் பின்

என் கடன்கள் ஏதாவது இருந்தால் அவைகளை அடைக்க மட்டில் காத்தாயி சொத்துக்களை விற்கலாம்; வேறு காரணங்களுக்காகச் சொத்துக்களை அவள் விற்கக் கூடாது."

இந்த உயிலின் வாசகத்தில் உள்ள குழப்பத்தைக் கவனியுங்கள். வைத்தியலிங்கம் பிள்ளை தம்முடைய மகள் காத்தாயிக்குத் தம் சொத்துக்களின் மீது எவ்வகைப் பாத்தியத்தைக் கொடுத்திருக்கிறார்? ஓர் இடத்தில் அவள் அச் சொத்துக்களை, "சர்வ சுதந்திரத்துடன் அடைய வேண்டியதென்று" சொன்னார். இதற்கு என்ன அர்த்தமென்றால் "காத்தாயி அச் சொத்துக்களைத் தன் இஷ்டம்போல் எவ்வித பராதீனங்களும் செய்யலாம்" என்று தானே அர்த்தம். அப்படி இருக்கும்போது பின் வாக்கியத்தில் "கடனுக்குத்தான் சொத்தை அவள் விற்கலாம்; வேறு காரணங்களுக்காக விற்கக் கூடாது" என்பது அவளுடைய "சர்வ சுதந்திர பாத்தியத்தை"க் குறைக்கின்றதே! மேலும் சொத்துக்களைத்தான் காத்தாயிக்கு அத்தறுதியாகக் கொடுத்து விட்டாரே; அவள் இறக்கும்போது அவளுக்கு ஏதாவது சொத்துக்கள் இருந்தால் அதை அவளுடைய வார்சுகள் சட்டப்படி யார் அப்பொழுது இருக்கிறார்களோ அவர்கள் அடைவார்களே. அதைப் பற்றியும் என் வைத்தியலிங்கம் பிள்ளை கவலைகொண்டு உயிலில் "காத்தாயியின் ஆயுளுக்குப் பிறகு அச் சொத்துக்களை அவருடைய பேரன் ராமசாமி அடைய வேண்டும்" என்று எழுதினார்? அப்படியானால், ஒரு வேளை காத்தாயிக்கு அவள் ஆயுள்வரை அனுபவிக்கும் பாத்தியத்தை மட்டில் உயில் மூலம் அவளுக்குக் கொடுத்திருக்கிறாரோ? முன்பு "சர்வ சுதந்தரமாய்" என்று சொன்னது சரி அல்லவோ?

இவ்விதமான சட்ட பிரச்னைகள் இவ்வழக்கில் ஏற்பட்டன. சொத்தை அடைந்த காத்தாயி, கடனுக்காக மட்டில் அல்லாமல் (வேறு விதத்திலும்) சொத்துக்களை விற்றுவிட்டாள். அவள் இறந்த பிறகு உயிலில் குறிப்பிடப்பட்டிருக்கும் அவளுடைய பேரன் ராமசாமி சொத்துகளைக் கிரயம் வாங்கியவர் மீது வழக்குத் தொடர்ந்தார். காத்தாயிக்குத் தன் ஆயுள் வரை சொத்துக்களை அனுபவிக்கும் பாத்தியம் தான் கொடுக்கப்பட்டதென்றும்; அதனால் அவள் செய்த பராதீனங்கள் அவளுடைய ஆயுளுக்குப் பின் செல்லாதென்றும்; அவளுடைய ஆயுளுக்குப் பின் அச் சொத்துக்களைத் தாமே உயில்படி அடையப் பாத்தியமுள்ளவரென்றும்; மேலும் காத்தாயி பராதீனம் செய்வதினின்று உயில் மூலம் தடுக்கப்பட்டிருப்பதால் அவள் செய்த பராதீனம் செல்லாதென்றும் சொத்து வாங்கியவர் மீது வழக்குத் தொடங்கினர். முதல் இரண்டு கோர்ட்டுகளிலும் அவருடைய வழக்குத் தள்ளப்பட்டது. அவர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். அங்கும் அவருக்கு விரோதமாகவே முடிந்தது.

ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி அவர்கள் இது சம்பந்தமான சட்ட நுட்பங்களை விளக்கி இருக்கின்றனர். உயில் எழுதி வைத்தவருடைய எண்ணம் என்ன என்று அவர் உயிலில் உபயோகிக்கும் சொற்களிலிருந்தும் வாசகங்களிலிருந்தும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும்; அச் சொற்கள் சட்ட பரிபாஷையில் குறிப்பிட்ட அர்த்தமுள்ள சொற்களாக இருந்தால் அதே அர்த்தத்தில் தான் உயிலிலும் உபயோகிக்கப் பட்டிருக்கிறதென்று தீர்மானிக்க வேண்டுமென்றும்; "சர்வ சுதந்திரத்துடன் அடைவது" என்பது யாவருக்கும் தெரிந்த ஒரு சட்ட பரிபாஷைச் சொல் என்றும் உயிலில் இச்சொல் உபயோகிக்கப் பட்டிருப்பதால், காத்தாயிக்குக் கொடுக்கப்பட்ட சொத்துக்களில் அவளுக்குச் சகல உரிமைகளும் உண்டென்றும்; முதலில் ஒருவருக்குச் சொத்தில் பூர்ண உரிமையைக் கொடுத்துவிட்டு, பிறகு வரும் வாசகங்களில் அந்த உரிமை குறைக்கப்பட்டால் பின்பு வரும் இவ்வாசகங்கள் சட்டப்படி செல்லுபடியாகாவென்றும்; ஆகையால் காத்தாயி (கடனுக்காக அல்லாமல் வேறு) பராதீனம் எதுவும் செய்யக் கூடாதென்ற பிந்திய ஷரா சட்டப்படி செல்லாதென்றும்; அவள் எக்காரணத்தைக் கொண்டும் தன் இஷ்டப்படி பராதீனம் செய்ய உரிமை உள்ளவளாகையால் அவள் செய்த பராதீனங்கள் செல்லும் என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

லஞ்சம் வாங்குவதற்காகப் பொய்க் கணக்கு ஜோடித்த உதவி இன்ஜினியரும் கண்ட்ராக்டரும்

கோர்ட்: அலகாபாத் ஹைகோர்ட்

நீதிபதி: கனம் நீதிபதி சித்வாய் அவர்கள்

ஆதாரம்: 1950 ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்—அலகாபாத்—639

திருட்டு, கொள்ளை போன்ற செய்கைகளால் பிறர் சொத்தை அபகரிப்பவர்களுக்குப் பல கஷ்டங்களும் ஆபத்துக்களும் இருக்கத்தான் இருக்கின்றன. ஆனல் ஒரு பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்த அதிகார பீடத்திலிருக்கும் ஓர் அதிகாரியின் மனதில் கெட்ட எண்ணங்கள் தோன்றினல், அவர் பொதுப் பணத்தைக் கொள்ளையடிக்க எவ்வளவு சுலபமான முறைகளைக் கையாளுகின்ருர் என்று இத் தீர்ப்பிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இவ் விதம் செய்வதற்கு அவருக்குக் கன்னக்கோலோ கத்தியோ தேவையில்லை. லஞ்சம் வாங்கும் அதிகாரியின் ஆயுதம் அவருடைய பேனதான். அகப்பட்டால் தானே குற்றம் செய்பவர் மாட்டிக்கொள்வார்? ஒருவரும் கண்டு பிடிக்க முடியாத முறையில் தம் பேனவை உபயோகித்து, வெகு சுலபமாகப் பணம் சம்பாதித்து விடலாமென்று நினைத்த ஒரு ரயில்வே அசிஸ்டெண்ட் இன்ஜினியருக்கு, லஞ்ச எதிர்ப்பு இலாகா என்று ஒன்று மாறுவேடத்தில் புலன் விசாரித்து வேலை செய்து கொண்டிருப்பது தெரியாது போலும்! கையுங்களவுமாக மாட்டிக் கொண்டார்.

தப்பிக்கொள்ளப் பல வழிகளைக் கையாண்டார். லஞ்சம் வாங்கும் எந்தப் பெரிய உத்தியோகஸ்தரும் தம் கீழ் இருக்கும் சின்ன உத்தியோகஸ்தர் மீது பழியைப் போட்டுத் தாம் நழுவி வெளியே ஓட வழி தேடுவது, தொன்று தொட்டு இவர்கள் கையாளும் முறையே! இம்முறையை இவ்வழக்கில் தோன்றும் உதவி இன்ஜினியர் முதலில் கையாண்டார். பலிக்கவில்லை. பிறகு கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்திலிருந்து எடுத்த பல முட்டுக்கட்டைகளை உபயோகித்துப் பார்த்தார். முடியவில்லை. இம்முட்டுக்கட்டைகள் என்ன என்று ஆராயுமுன் இவ்வழக்கு எப்படி ஏற்பட்டதென்று கொஞ்சம் கவனிப்போம்.

இவ்வழக்கில் மாட்டிக்கொண்ட அதிகாரி ஒரு ரயில்வே அசிஸ்டெண்ட் இன்ஜினியர். ஒரு இன்ஜினியர் மாட்டிக் கொண்டால் அவருடன்கூட மாட்டிக்கொள்ள வேண்டியவர் யார் என்று யாவரும் ஊகித்துக் கொள்ளலாம். கண்ட்ராக்டர்தான்.

ரயில் பாதைகளில் அடிக்கடி பழுது ஏற்படும். ஒவ்வோர் இடங்களில் பூமியில் பதிக்கப் பட்டிருக்கும் ரயில் தண்டவாளங்கள் ஆடி அசையாதபடி பலப்படுத்தப்பட வேண்டியதாக இருக்கும். இதற்குப் பக்கத்தில் உள்ள நிலங்களிலிருந்து மண்ணை வெட்டி ரயில் பாதையில் அணைத்து அதைக் கெட்டிப்படுத்துவார்கள். மிக முக்கியமான வேலை. தண்டவாளங்கள் ஆட்டங்கண்டால் ரயில் கவிழ்ந்து போகும். உயிர்ச்சேதம் ஏற்படலாம். இவ்வித வேலைகளையும் இதைப்போல் பொறுப்பு வாய்ந்த பல வேலைகளையும் பெரும்பான்மையாகச் சர்க்காரோ, ரயில்வே நிர்வாகமோ நேரில் செய்வதில்லை. 'கண்ட்ராக்டில்' விடுவார்கள். ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிக்க என்னென்ன சாமான்கள் வேண்டும்; கூலி என்ன ஆகும் என்று முதலில் ஒரு மதிப்புப் போடுவார்கள். இதற்கு 'எஸ்டிமேட்' என்று சொல்வது. பிறகு இதைச் செய்து கொடுக்க ஒரு 'கண்ட்ராக்டர்' வந்து சேருவார். பல கண்ட்ராக்டர்கள் போட்டியிட்டால் யாருக்கு அந்த வேலையைக் கொடுப்பது என்பது பற்றி விதிகள் இருக்கும். அவைகளை அனுசரித்து ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து கொடுக்க ஒரு 'கண்ட்ராக்ட'ருக்கு, 'காண்ட்ராக்ட்' அதாவது ஒப்பந்தம் கொடுக்கப்படும். அவர் தம் வேலையைச் செய்துவிட்டு அதற்கான தொகையைப் பெற்றுக் கொள்வார்.

வட இந்திய ரயில்வே பாதை ஒன்றில் 1947 ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு இடங்களில் பழுது ஏற்பட்டன. இரண்டு இடங்களிலும் பழுது பார்க்க என்ன

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187703
சென்னை-600008

செலவாகும் என்று முதலில் 'எஸ்டிமேட்' தயார் செய்யப்பட்டது. பக்கத்திலிருக்கும் பண்ணை வெட்டி எடுத்து ரயில்வே லயனில் அணைக்கவேண்டிய வேலைதான். ஓர் இடத்தி லுள்ள பழுதுக்கு ரூ. 1093 பிடிக்குமென்றும், வேறு இடத்திலுள்ள பழுதுக்கு ரூ. 857 பிடிக்கு மென்றும் இன்ஜினியர் டிபார்ட்மெண்டால் மதிப்பு (எஸ்டிமேட்) போடப்பட்டது. இந்தக் 'காண்ட்ராக்ட்' இரண்டும் ராம்சேவக் என்ற ஒரு கண்ட்ராக்டருக்குக் கொடுக்கப்பட்டது. மேற்பார்வை பார்க்கவேண்டியவர் சன்யால் என்ற ரயில்வே ஓவர்சியர். அவருக்குமேல் உள்ள அதிகாரிதான் கோஷ் என்ற அசிஸ்டெண்ட் இன்ஜினியர்.

ராம் சேவக், அதாவது கண்ட்ராக்டர், இவ் வேலைகளை 1947 டிசம்பரில் ஆரம்பித்து 1948 மார்ச்சில் முடித்தார். (அல்லது—முடித்து விட்டதாகச் சொன்னார்.) வேலை சரிவரச் செய்யப் பட்டிருக்கிறதா என்று அளந்து பார்த்துச் சொல்லவேண்டிய பொறுப்பு ஓவர்சிய ருடையதும், உதவி இன்ஜினியருடையதும் ஆகும். சின்ன வேலைகளை ஓவர்சியர் போய் அளந்து பார்க்கவேண்டும். ரூ. 500-க்கு மேற் பட்ட வேலைகளை உதவி இன்ஜினியர் நேரில் போய் அளந்துவர வேண்டும். இந்த வேலைகள் இரண்டும் மண் வெட்டிக் கொட்டவேண்டிய வேலைகளாதலால், எவ்வளவு மண் வெட்டிக் கொட்டப்பட்ட தென்று கண்டுபிடிக்க, மண் எடுக்கப்பட்ட குழிகளின் நீளம், அகலம், உயரம் இவைகளை அளந்து எழுதிக் கொண்டு கணக்குச் செய்யவேண்டும். ரூ. 500-க்கு மேற்பட்ட வேலை களாதலால் உதவி இன்ஜினியர் கோஷ் நேரில் போய் இரண்டு ஸ்தலங்களிலும் மண் வெட்டிக் கொட்டிய குழிகளை அளந்து தம்முடைய 'மெஷர் மெண்ட் புக்' என்ற அளவுக்கணக்கில் தம் கையாலேயே குறித்துக் கொண்டார். அக் கணக்குப்படி இரண்டு வேலைகளுக்கும் தனித் தனி 'பில்' (பட்டியல்) தயார் செய்தார். அவைகளில் தம் கையெழுத்தும் போட்டார். ஓவர்சியரும், கண்ட்ராக்டரும் இவைகளில் கையெழுத் திட்டனர். இந்த 'பில்' களைத் தமக்கு மேல் உள்ள பெரிய இன்ஜினியருக்கு அனுப்பினர். கடுதாசியில் ஒழுங்காக இருந்தபடியால் இந்தப் பெரிய இன்ஜினியரும் அவைகளை அங்கீகரித்து, அவைகளின்படி கண்ட்ராக்டருக்குப் பணம் கொடுத்து விடலா மென்று உத்தரவிட்டார். இவைகளை எடுத்துக் கொண்டு போய்க் கண்ட்ராக்டர் கஜானவில் பணம் மாற்றவேண்டியதுதான் பாக்கி. ஆனால் பணம் வாங்கவில்லை. அதற்குள் கண்ட்ராக் டரும் உதவி இன்ஜினியரும் கைதியானார்கள்!

இது யாருடைய வேலையோ தெரியவில்லை. கண்ட்ராக்டரும் உதவி இன்ஜினியரும் ஒன்று சேர்ந்து ஒக்குமத்தாகப் பொய்க்கணக்கு ஜோடித் திருப்பதாகவும்; இரண்டு வேலை ஸ்தலங்களிலும் செய்யப்படாத வேலைகளைச் செய்திருப்பது போலும்; மண்தோண்டி எடுத்திருப்பதாக உதவி இன்ஜினியர் கணக்குக் குறித்துக் கொண்ட குழிகள் எல்லாம் கற்பனை என்றும், ஸ்தலத்தில் அவ்விதம் குழிகளே இல்லை என்றும் லஞ்ச எதிர்ப்பு இலாகாவுக்குத் தகவல் எட்டியது. அவர்கள் உடனே ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் உதவியை நாடி ஒரு மாஜிஸ்ட்ரேட்டையும் பெரிய இன்ஜினியரை யும் கூட அழைத்துக் கொண்டு ஸ்தலத்திற்குச் சென்றனர். அளவு எடுத்த உதவி இன்ஜினியர் கோஷையும் கூடக் கூப்பிட்டுச் சென்றனர். இரண்டு இடங்களையும் சோதனை போட்டதில் ஒரு இடத்தில் இருந்த குழிகளைவிட 11 குழிகள் அதிகமாகவும், இரண்டாவது இடத்தில் 13குழி கள் அதிகமாகவும் இருப்பதாக உதவி இன்ஜி னியர் கோஷ் கணக்கு எடுத்திருந்தது வெளிப் பட்டது. இக்கற்பனைக் குழிகள் 24க்கும் ஒவ் வொன்றுக்கும் நீளம், அகலம், உயரம் எல்லா வற்றையும் உதவி இன்ஜினியர் ஜோடித்துக் கணக்கு எழுதிக்கொண்டிருந்தது புலனாயிற்று! ஏன் இப்படிச் செய்யவேண்டும்? லஞ்சம் வாங்கத்தான். ஏன் இவருக்குக் கண்ட்ராக்டர் லஞ்சம் கொடுக்கவேண்டும்? அவரும் பணம் சம்பாதிக்கத்தான்! பணம் எது? ரயில்வேப் பணம். பொது மக்களின் பணம். கண்ட்ராக்டர் ஒரு இடத்தில் ரூ. 314-2-0க்கு மட்டில் உண்மையில் செய்த வேலையை ரூ. 906-8-0க்குச் செய்திருப்பதாகவும், இரண்

டாவது இடத்தில் ரூ. 274-10-0க்கு மட்டில் உண்மையில் செய்த வேலையை ரூ.867-11-0க்கு செய்திருப்பதாகவும் கணக்கு ஜோடித்தார், உதவி இன்ஜினியர். ஒருவரும் செய்யாத வேலைக்கு ரூ. 1215-7-0 ரயில்வே கஜானுவி லிருந்து சுலபமாகக் கிடைக்கும். உதவி இன்ஜினியரும் கண்ட்ராக்டரும் இதைப் பங்கு போட்டுக் கொள்ளலாம். சுலபமான வழி. குறிப்பிட்ட ஒரு தனி நபரின் பணம் கொள்ளை யடிக்கப் படவில்லை. பொதுப் பணம். யாருக்கு அக்கரை! ஆனல் இவை எல்லாம் கனவாகி, குற்ற வழக்கு வந்துவிட்டதே! இனி இதி லிருந்து தப்ப வழி உண்டா பார்க்கலாம் என்று எண்ணினர் உதவி இன்ஜினியர்.

போலீசார் மூன்று பெயர்களையும் சேர்த்து, மோசடி செய்த குற்றத்திற்காகவும், சதி செய்த குற்றத்திற்காகவும் கிரிமினல் வழக்குத் தொடர்ந்தனர். அதாவது, உதவி இன்ஜினியர், ஓவர்சியர், கண்ட்ராக்டர் மூவர் மீதும். கீழ்க் கோர்ட்டில் ஓவர்சியர் மீது குற்றமில்லை என்று அவர் விடுதலை அடைந்தார். உதவி இன்ஜினியர் தமக்கு ஒன்றும் தெரியாதென்றும், வேலைத் தொந்தரவினுல், தாம் நேரில் இந்த ஸ்தலங் களுக்குப் போகவில்லை என்றும், தமது ஓவர் சியரை நம்பியே அவர் எடுத்த அளவுகளையே தாம் எடுத்தது போல் எழுதி ஏமாந்து போய் விட்டதாகவும் சொன்னர். கண்ட்ராக்டர் தாம் எல்லா வேலைகளையும் சரிவர கணக்குப்படி செய்து முடித்துவிட்டதாகவும் லஞ்ச எதிர்ப்பு அதிகாரிகள் வந்து திடீரென்று சோதனை அளவு எடுத்தபோது தம்மைக் கூட்டிக் கொண்டு போக வில்லை என்றும், தாம் போயிருந்தால் தாம் மண் எடுத்த குழிகளைக் காண்பித்திருக்க முடியு மென்றும் சரடு விட்டார். இவர்களுடைய கட்சிகளைக் கோர்ட் ஒப்புக் கொள்ளவில்லை. உதவி இன்ஜினியருக்கும், கண்ட்ராக்டருக்கும் ஒவ்வொரு வருடம் கடுங்காவல் தண்டனையும் ஆளுக்கு ரூ. 700 அபராதமும் விதிக்கப்பட்டது. செஷன்ஸ் கோர்ட்டுக்கு செய்த அப்பீலில் அத்தண்டனைகள் உறுதி செய்யப்பட்டன. அதன் பேரில் அலகாபாத் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் செய்தனர்.

அலகாபாத் ஹைகோர்ட்டில் எதிரிகளுக்காகப் பல சட்ட பிரச்னைகள் கிளப்பப்பட்டன. இவைகளை ஒவ்வொன்ருகக் கவனிப்போம்.

(1) குற்றங்களைப் பற்றிய வழக்கு முறைச் சட்டத்தின் (Criminal Procedure Code) 233 - ஆவது செக்ஷன்படி - ஒருவர் பல குற்றங்கள் செய்திருந்தாலும் ஒவ்வொரு குற்றத்திற்கும் அவர்மீது போலீசார் ஒரு தனிக் குற்றச் சாட்டுதல் (Separate charge) தாக்கல் செய்யவேண்டும். ஒவ்வொரு குற்றச் சாட்டும் தனித் தனியாக விசாரிக்கப்படவேண்டும். உதாரணமாக, ஒருவர் ஒரு சமயத்தில் திருடி விட்டார். வேறு ஒரு சமயத்தில் ஒருவரைக் கத்தியால் குத்தி, காயம் ஏற்படுத்திவிட்டார் என்று வைத்துக்கொள்ளுவோம். ஒருவரே இரண்டு குற்றங்கள் செய்து விட்டார். அவர்மீது போலீசார் இரண்டு குற்றங்களையும் கண்டு ஒரு வழக்குத் தொடரவும் முடியாது; இரண்டு குற்றங்களையும் ஒரே வழக்கில் நீதிபதி விசாரிக்கவும் (trial) முடியாது. அதாவது திருட்டுக் குற்றத்திற்குத் தனிக் குற்றச் சாட்டுச் செய்து அதைத் தனியாக விசாரிக்க வேண்டும். கத்தியால் குத்திய குற்றத்திற்கு வேறு ஒரு தனிக் குற்றச் சாட்டுச் (சார்ஜ்) செய்து அதைத் தனியாக விசாரிக்கவேண்டும். இதற்குச் சில விதி விலக்குகளும் உண்டு. உதவி இன்ஜினியரின் வக்கீல் வாதாடியது என்ன வென்றுல்:—ஒரு இடத்தில் 11 இடங்களில் மண்வெட்டி எடுத்ததாக எதிரி பொய்க் கணக்கு ஜோடித்திருப்பது 11 குற்றங்களாகும்; வேறு ஒரு இடத்தில் 13 இடங்களில் மண் வெட்டி எடுத்ததாகப் பொய்க்கணக்கு ஜோடித் தது 13 குற்றங்களாகும்; ஆக 24 குற்றங்களை யும் சேர்த்து ஒரே குற்றச்சாட்டில் ஒரே விசாரணையில் விசாரித்தது பெரிய சட்ட விரோதமான காரியமென்றும், வழக்கின் விசாரணையே செல்லாதென்றும், அக்காரணத் தால் கீழ்க்கோர்ட் தீர்ப்புகளை ரத்து செய்ய வேண்டுமென்றும் வாதாடினர். இதை உயர் நீதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றுல் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் 234-ஆவது செக்ஷன்படி இவை இரண்டு குற்றங்கள் தான் ஆகுமென்றும் ஒவ்வொரு இடத்தைப்பற்றிப் பொய்கணக்கு எழுதியதும் ஒரு குற்றம் தான் ஆகுமென்றும், ஒரே மாதிரியான குற்றத்தை ஒருவர் 12 மாதங்களுக் குள் செய்திருந்தால் அவைகளில் மூன்று குற்றங்கள் வரை சேர்த்துக் குற்றச்சாட்டுப் போட்டு, ஒரே விசாரணையில் நடத்தலாமென்று சட்டத்தில் இருப்பதால், இங்கு ஒரே காலத்தில் நடந்த ஒரே வகையான இரண்டு குற்றங்களைப் பற்றியும் சேர்த்து விசாரணை நடத்தி இருப்பது முறைத் தவறல்ல என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டார்.

(2) அடுத்தபடியாக மத்திய சர்க்காருடைய அல்லது ராஜ்ய சர்க்காருடைய அனுமதி யில்லாமல் வேலையை விட்டுத்தள்ள முடியாத சில பெரிய உத்தியோகஸ்தர்களும்

அதிகாரிகளும் உத்தியோக முறையில் செய்யும் குற்றங்களுக்காக அவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர வேண்டுமானால், சாதாரண ஆசாமிகள் மீது தொடருவதுபோல் தொடரமுடியாது. அவர்கள் மீது கிரிமினல் கேஸ் போட எற்கனவே இருந்தபடி கவர்னர் ஜெனரலின் அனுமதியோ, கவர்னருடைய அனுமதியோ வேண்டுமென்ற கிரிமினல் வழக்கு முறை சட்டத்தின் 197-அவது பிரிவில் இருக்கிறது. இந்த உதவி இன்ஜினீயரை மத்திய ரயில்வே போர்டுதான் நீக்க முடியுமாகையால், அவர்களுடைய அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கிரிமினல் சேஸ் செல்லாதென்று வாதாடினார். இதையும் நீதிபதி அங்கீகரிக்கவில்லை. ரயில்வேபோர்டு என்பது மத்திய சர்க்காருமல்ல; ராஜ்ய சர்க்காருமல்ல; ஆகையால் இந்த விதி எதிரிக்குப் பிரயோஜனமில்லை என்றார்.

(3) மூன்றாவதாகக் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தில் வேறு ஒரு விதி இருக்கின்றது. சில குற்றங்களைச் செய்ய இரண்டு அல்லது பல நபர்கள் சதி ஆலோசனை செய்தால் அப்படிச் சதியாலோசனை செய்வதே, ஒரு தனிக் குற்றம் (இந்தியன் பீனல் கோடு 120 B) இவ்விதமான சதிக் குற்றங்களுக்காக ஒருவர் மீது கிரிமினல் வழக்குத் தொடர வேண்டுமானால் பெரிய தண்டனை உள்ள குற்றங்களுக்கு எவருடைய முன் அனுமதியுமில்லாமலே வழக்குத் தொடரலாம். அதாவது மரண தண்டனை, தீவாந்திர சிட்சை அல்லது இரண்டு வருடங்களுக்குமேல் கடுங்காவல் தண்டனை விதிக்கக் கூடிய குற்றங்களைச் செய்யப் பல நபர்கள் சதி செய்தால் ஒரு அதிகாரியின் அனுமதியின்றியே போலீசார் வழக்குத் தொடர முடியும். அதற்குட்பட்ட சிறிய தண்டனைகள் விதிக்கக் கூடிய சிறிய குற்றங்களைச் செய்வதற்காக பலர் சதி செய்தால் ராஜ்ய சர்க்கார் அல்லது ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதி வேண்டும். என்று இருக்கிறது. இந்த உதவி இன்ஜினியர் கோஷ் செய்தது பீனல் கோடு 415-ஆவது செக்ஷன் படிக்குள்ள வெறும் மோசடிக் குற்றம் தானே. இதற்குத் தண்டனை ஒரு வருடத்திற்கு மேல் இல்லை. இக் குற்றத்தைச் செய்ய இருவர் சதி செய்ததாகக் கிரிமினல் கேஸ் தொடர ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதி வேண்டும். அது இல்லாமல் தொடர்ந்த இவ் வழக்குச் செல்லாது என்று வாதாடப்பட்டது. இதையும் நீதிபதி ஒப்புக்கொள்ளவில்லை. இவர் செய்தது சாதாரண மோசடியல்ல; மோசடி என்ற குற்றம் சில சந்தர்ப்பங்களில் மிகப் பெரிய குற்றமாகி, கடுமையான தண்டனை விதிக்கப் படக் கூடியதாகின்றது. பீனல் கோடின் 418 ஆவது செக்ஷன் படி-ஒருவர் யாரைச் சட்டப் படி பாதுகாக்க வேண்டுமோ அவருக்கே நஷ்டம் உண்டாக்கும்படி மோசடி செய்தால் அதற்குத் தண்டனை மூன்று வருடம் விதிக்கலாம்; செக்ஷன் 419-ன் படி—ஒருவர், வேறு ஒரு நபர் போல் நடித்து மோசடி செய்தால் அதற்கு 3 வருட தண்டனை உண்டு; 420-ஆவது செக்ஷன் படி–வேறு ஒருவருடைய சொத்தைக் கொடுக்கும்படி மோசடி செய்தால் ஏழு வருடம் வரை தண்டனை உண்டு. உதவி இன்ஜினீயர் செய்தது ரயில்வேக்காரர்கள் பணத்தைக் கொடுக்கும் விதம் மோசடி செய்தார்; இதற்கு 7 வருடம் வரை தண்டனை விதிக்கலாம். ஆகையால் இக் குற்றத்தைச் செய்ய இவரும் கண்ட்ராக்டரும் சதி செய்ததால் மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதியின்றியே அவர்கள் மீது போலீசார் வழக்குத் தொடரலாம் என்று நீதிபதி அபிப்பிராயப்பட்டார். கடைசியாகத் தண்டனை மிக அதிகம் என்று வாதாடப்பட்டது. உதவி இன்ஜினியருக்கு வேலை போய்விட்டதே பெரிய தண்டனை என்றும், கோர்ட்டால் விதிக்கப் பட்டது மிக அதிகமென்றும் அவருடைய வக்கீல் வாதாடினார். இதற்கு நீதிபதி அவர்கள் மிக அழகாக அபிப்பிராயம் கூறி இருக்கின்றனர். தண்டனை கொடுப்பது என்பது எதிரியின் மீதுள்ள அரசாங்கத்தின் ஆத்திரத்தைக் காட்டுவதற்காக இல்லை என்றும், அரசாங்கத்திற்கு ஒருவர் மீதும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் கிடையாதென்றும்; ஆனால் வேறு எவரும் இவ்விதமான குற்றங்கள் செய்யாமல் தடுப்பதற்காகவே கடும் தண்டனைகள் விதிக்கப்படுகின்றனவென்றும், 'தண்டனை என் விதிக்கப்படுகிறது' என்பதின் கொள்கையை நீதிபதி விளக்கி இருக்கின்றனர். லஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் சட்ட விரோதமாய் ஏராளமாகப் பணம் சம்பாதித்த பிறகு அவர்களை வேலையை விட்டு மட்டில் நீக்கி, வேறு தண்டனை ஒன்றும் கொடுக்காவிட்டால், மற்றவர்களுக்கும் துணிச்சல் ஏற்பட்டுவிடுமென்றும் சொல்லி, கீழ்க்கோர்ட் தண்டனைகளை நீதிபதி அவர்கள் உறுதி செய்தனர்.

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கார்டுகளில் எழுதப்படும் கேள்விகளும் பென்சிலால் எழுதப்படும் கேள்விகளும் கவனிக்கப்படமாட்டா.

கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க: "வக்கீல்" பத்திரிகையில் வரிசைக் கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்யேகமாகத் தபால் மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை ரிஜிஸ்டர் தபால் மூலம் காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும் ரூபாய் இரண்டு தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்பவேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

1. கேள்வி: (சுப்பிரமணியம் செட்டியார் - கோனுப்பட்டு) ஒத்தி நிலசம்பந்தமான சட்டம் எப்பொழுது பாஸ் செய்யப்பட்டிருக்கிறது? எந்தத்தேதி முதல் அமுலுக்கு வந்திருக்கிறது? ஒருவர் ஒத்தி பிடித்து, ஒத்தி நிலத்தைச் சுவான்தாரின் சுவாதீனத்திலேயே சாகுபடிக்கு விட்டு ஒத்திதார் வட்டிக்குப் பதிலாக மகசூலை மட்டில் வாரமாக இருபது வருடங்களாக அடைந்து வருகிறார். ஒத்திச் சட்டம் இதை எப்படிப் பாதிக்கும்?

பதில்: சென்னை விவசாயிகள் நிவாரணச் சட்டத்தில் ஒத்தி சம்பந்தமாக முதலில் திருத்தச் சட்டம் ஏற்பட்டது. 25—1—1949-ல் அப்பொழுது செக்ஷன் 9-A என்று ஒரு புது செக்ஷன் சேர்க்கப்பட்டது. இந்தச் செக்ஷன் 9-A என்பது மறுபடியும் ஒரு திருத்தச்சட்டத்தால் இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படித் திருத்தி அமைத்த சட்டம் 31—10—1950-ல் அமுலுக்கு வந்தது. (1950ஆம் வருடத்திய 24ஆவது சென்னைச் சட்டம். 1950 டிசம்பர் மாத "வக்கீல்" இதழில் இச்சட்டம் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது.) ஒத்திநிலங்கள் சுவான்தாரிடமே குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், ஒத்தி அசல் தொகையில் வருடம் 1-க்கு 30-ல் 1 பங்கு கழிவு ஏற்படாது. ஆனால் ஒத்திதார் வருடா வருடம் அடைந்து வரும் மகசூலின் கிரயத்தொகை அசல் தொகைக்குக் கொடுக்கப்பட்ட ரொக்க வட்டியாகப் பாவிக்கப்பட்டு, 1—10—1932க்கு முன் ஏற்பட்ட சாதாரணக் கடன்களுக்கு எவ்விதம் இச்சட்டத்தால் பரிகாரம் அளிக்கப்படுமோ, அதே பரிகாரம் இதற்கும் அளிக்கப்படும்.

2. கேள்வி: (பாண்டுரங்கன் - கோயமுத்தூர்) ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பவர்கள் சட்டப்படி எவ்வளவு விகிதம் வட்டி வாங்கலாம்? அதற்குமேல் வட்டி வாங்கினால் அது செல்லாது என்பதுதானா? அல்லது அது ஒரு குற்றமாகுமா?

பதில்: கடனின் அசல் தொகை ரூபாய் 25 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் $9\frac{3}{8}\%$- அதாவது மாதம் 1-க்கு ரூபாய் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ தம்படி விகிதத்திற்கு மேலும்; ரூ. 25க்கு மேற்

பட்ட கடன்களுக்கு 6¼% - அதாவது மாதம் 1-க்கு ரூபாய் ஒன்றுக்கு ஒரு தம்படிக்கு விகிதத்திற்கு மேலும் வட்டி வாங்கக்கூடாது. அதற்கு மேற்பட்ட வட்டி செல்லவும் செல்லாது. அச்சட்டத்தின் 18ஆவது செக்ஷன்படி அதிக வட்டி வாங்குவது ஒரு குற்றமும் ஆகும்.

3. கேள்வி: (மெர்செல்லா — புதுக் கோட்டை) மூதாதைகளால் தேடிவைக்கப் பட்ட ரொக்கத்தையும் சொத்தையும் தகப்பனார் தாராகிருதமாய் செலவு செய்தும், சொத்தை ஜனக்கிரயங்களுக்கு விற்றும் இருக்கிறார். ஷையாருக்கு ஆண் வார்சு கிடையாது. ஒரு மைனர் பெண் இருக்கிறாள். ஷை பெண் பிறந்த பிறகே, மேற்கண்டபடி தகப்பன் சொத்துக்களை அழித்துவிட்டார். இந்த சட்டப்படி பெண்ணுக்கு மேற்படி, கிரய சொத்துக்களில் பாத்தியமுண்டா?

பதில்: பெண்ணுக்கு, தகப்பன் உயிருடன் இருக்கும் வரை, சொத்தில் பாத்தியம் கிடையாது. ஆனால் குடும்பச் சொத்துக்களிலிருந்து அவள் கலியாணமாகும் வரை, போஷணை அடைந்துவரும் உரிமை, பெண்ணுக்கு உண்டு. இந்த உரிமை இருப்பது தெரிந்து சொத்துக்களை ஒருவர் கிரயத்துக்கு வாங்கினால், சில சந்தர்ப்பங்களில், பெண் மேற்கண்ட தம் உரிமையை, அச்சொத்தின்மீது தொடர்ந்து வற்புறுத்த இடமுண்டு.

4. கேள்வி: (ரத்தின முதலியார் - ஈரோடு) ஒரு பிராமிசரி நோட்டில் 3 வருடங்களுக்கு ஒரு முறை நோட்டு எழுதிக் கொடுத்தவர் வரவு வைத்துக் கொண்டே வந்திருந்தால், அது எத்தனை தடவைகள் அவ்விதம் வரவு வைத்தாலும் செல்லுமா? 24 வருடங்கள் இவ்விதம் 3 வருடங்களுக்கொருமுறை வரவு வைக்கப்பட்டிருந்தால் செல்லுமா?

பதில்: செல்லும்.

5. கேள்வி: (மன்னார் செட்டியார் - திருவண்ணாமலை) தகப்பனார் தம்முடைய சுயார்ஜித சொத்தைத் தம்முடைய வார்சுகள் பரம்பரையாக அதில் வரும் வருமானத்தை அனுபவிக்கலாமே ஒழிய, சொத்தை அடமானமோ, கிரயமோ, போக்கியமோ, செய்ய உரிமை கிடையாதென்று எழுதி ரிஜிஸ்டர் செய்யப் பட்ட உயில் சாசனத்துக்கு மாறாக மகனோ, அல்லது பேரனோ கிரயம் முதலிய செய்ய உரிமை உண்டா?

பதில்: உரிமை உண்டு. இந்த உரிமை கிடையாதென்று சொல்லும் உயில் ஷரத்துச் செல்லாது.

6. கேள்வி: (குருசாமி அம்பலம் - மேலூர்) ஒருவர் தம் நிலத்தை 1926-ல் ஒத்திவைத்தார். ஒத்திவாங்கியவர் தம்முடைய ஒத்திப் பாத்தியத்தை 1933-ல் ஒரு கோவிலுக்கு எழுதி வைத்துவிட்டு 1941-ல் இறந்து விட்டார். ஒத்திச் சொத்துக்கள் கோயில் டிரஸ்டியிடம் இருக்கின்றன. ஒத்திவைத்தவர் சொத்தை மீட்க எவ்வளவு தொகை கட்ட வேண்டும்?

பதில்: விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் செக்ஷன் 9A(3)ன்படி அசல் தொகையில் வருடம் 1-க்கு 30-ல் 1 பங்கு கழிவு ஏற்படும். அது போக, பாக்கி அசல் தொகையைக் கட்டி மீட்க வேண்டும்.

7. கேள்வி: (சங்கரநாராயண அய்யர் — கங்கைகொண்டான்) பிரிவினை ஆகாத (இந்து) சகோதரர்கள் பொதுக் குடும்பமாக இருந்து வியாபாரம் நடத்தி, ஷை வியாபாரத்தில் ஏற்பட்ட கடனுக்காக மூத்த சகோதரர் மற்றச் சகோதரர்களிடம் பவர் ரிஜிஸ்டர் செய்து வாங்கி, குடும்ப நிலங்களைக் கடனுக்காகக் கிரயம் செய்து கொடுக்கிறார். ஷை சகோதரர்களில் ஒருவர் தனிப்பட்ட முறையில் (மேற்கண்ட கிரயம் ஏற்படுவதற்கு முன்) தன் பிரிவினையாகாத பாகத்தை அடமானம் செய்து கடன் வாங்கினால், அக்கடன் பொதுக் கடனுக்காக விற்கப்பட்ட சொத்துக்களைக் கட்டுப்படுத்துமா?

பதில்: கட்டுப்படுத்தும்.

8. கேள்வி: (முகமது - விழுப்புரம்) ஒரு காலியிடத்தின் சொந்தக்காரர் அந்த இடத்தைச் சீர் செய்து அதில் வீடு கட்டிக்கொள்ளும்படிக்கும், எவ்வளவு காலம் இருந்தாலும் வாடகை வேண்டாமென்றும், வேறு ஒருவரை அனுமதித்தார். அனுமதிபெற்றவரும் அதை நம்பி

அந்த இடத்தைச் சீர் செய்து ஏராளமான செலவு செய்து, வீடு கட்டி, சுமார் 6 வருடன்கள் ஆகின்றன. யாதொரு வாடகைச் சீட்டு மில்லை. நிலக்காரர் இப்பொழுது நிலத்தைக்காலி செய்யவேணடு மென்று கேட்கலாமா?

பதில்: முடியாது.

9. கேள்வி: (முகமது காசிம்-புத்தாநத்தம்) ஒரு முஸ்லீம் தம் சொந்தச் சம்பாத்தியத்தி லிருந்து சம்பாதித்த நிலம், வீடு இவைகளைத் தம் மனைவி பெயருக்கு எழுதிவைத்தார். மனைவி 1940-ல் இறந்தாள். அவருக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் உண்டு. அச்சொத்துக்கள் யாரைச் சேரும்? தகப்பன் அச்சொத்துக்களைத் தம் பெயருக்கே பட்டா மாற்றிக் கொள்ளச் சட்டம் உண்டா?

பதில்: இறந்த மனைவியின் வார்சுகளைச் சேரும். அதாவது அவளுடைய புருடனுக்குச் சொத்தில் 4 ல் 1 பங்கும் பாக்கியில் இரண்டு பங்கு ஆண்குழந்தைக்கும் ஒரு பங்கு பெண் குழந்தைக்கும் சேரும். வேறு விசேஷ சந்தர்ப்பங்கள் ஒன்றுமில்லாவிட்டால், எல்லாச்சொத்துக்களும் தமக்கே பாத்தியம் என்ற முறையில் தகப்பன் (இறந்தவளுடைய புருடன்) தம் பெயருக்கு பட்டாமாற்றிக் கொள்ளமுடியாது. ஆனல் தம் குழந்தைகளுக்குக் கார்டியன் என்ற முறையில் மாற்றிக் கொள்ளலாம். இஸ்லாமிய சட்டத்தில் ஒருவர் சுயமாகச் சம்பாதித்த சொத்துக்கும், வேறு வகையில் அவர் அடைந்த சொத்துக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. இப்படி வித்தியாசம் இருப்பது இந்து சட்டத்தில் தான்.

10. கேள்வி: (சுப்பராயலு - திண்டுக்கல்) பஞ்சாயத்தாருக்கு ஸ்டாம்பில் ஒரு முச்சலிக்கா எழுதி, கையெழுத்துப் போட்டுக் கொடுத்து, பஞ்சாயத்தார் முடிவுசெய்தபின் கையெழுத்துப் போட்டவர்களில் சிலர் அம்முடிவை ஒப்புக் கொள்ளாமல் போனுல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழியுண்டா? பஞ்சாயத்து தீர்ப்பைக் கோர்ட்டில் ஒப்புக்கொள்வார்களா?

பதில்: மத்தியஸ்தச் சட்டம் (The Arbitration Act 10 of 1940) என்ற 1940 ஆம் வருடத்திய 10 ஆவது சட்டத்தின் படி, மத்தியஸ்தரின் தீர்ப்பைக் (Award) கோர்ட்டில் தாக்கல் (File) செய்து, அதைக் கோர்ட்டின் தீர்ப்பாகச் செய்து கொள்ள வேண்டும். இதற்காகத்தனி மனு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்து கொள்ளா விட்டால், மத்தியஸ்தரின் முடிவு, அல்லது, தீர்மானம் உபயோகமற்றதாகப் போய் விடும்.

11. கேள்வி: (வேணுகோபால் - நெய்வேலி) ஒருவருடைய வீட்டின் பக்கத்தில் வேறு ஒருவருடைய காலி நிலம் இருக்கிறது. வீட்டின் கூரைமீது விழும் மழை ஜலம் சுவரின் மீது விழாமல் இருக்க வாரி நீட்டப்பட்டிருக்கிறது. வாரி ஜலம் அடுத்த காலி நிலத்தில் விழுகின்றது. சுவர் மிக உயரமானதால், 40 வருடங்களாக வீட்டுக்காரர் தம் சுவரிற்கு ஆதாரவாகக் காலி நிலத்தில் மண் அணைத்து அனுபவித்து வருகிருர். இப்பொழுது காலி நிலக்காரர் தம் நிலத்தில் மண் போடக்கூடாதென்று தடுக்கமுடியுமா?

பதில்: முடியாது.

12. கேள்வி: (தங்கம் - மதுரை) இரண்டு இந்து சகோதரர்களில் பாகமாகாத நிலைமையில் மூத்தவர் இறந்து விட்டார். அவருக்கு மனைவி உண்டு. குழந்தைகள் இல்லை. இரண்டாவது சகோதாருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உண்டு. இவர் சொத்தை உயில் மூலம் தம் மனைவிக்கும் பெண்களுக்கும் வைத்திருக்கிருர். இவரும் இறந்து விட்டார். முதல் சகோதரரின் மனைவி வாங்கிய கடன்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் இச்சொத்தின் மீது தொடர முடியுமா? அவளுக்குப் பாகம் கிடைக்குமா?

பதில்: மூத்த சகோதரர் 14-4-1937க்குப் பின் 26—11—1946-க்கு முன் இறந்திருந்தால் குடும்பச்சொத்துக்களில் விவசாய நிலங்கள் தவிர மற்ற எல்லாச்சொத்துக்களிலும் சரிபாதி பாகம் அவருடைய மனைவிக்கு உண்டு. அவர் 26-11-1946 அல்லது அதற்குப்பின் இறந்திருந்தால் விவசாய நிலங்கள் உள்பட எல்லாக்குடும்பச் சொத்துக்களிலும் அவருக்குள்ள சரிபாதி பாகத்தை அவர் மனைவி அடைவாள். இவ்விதம் இறந்த கணவனுடைய பாகத்தை அடையும் மனைவிக்கு அச்சொத்துக்களைத் தம் ஆயுள் வரை அனுபவிக்கும் பாத்தியம் தான்.

அவளுடைய கடன்காரர்கள் இப்பாத்தியத்தின் மீது தொடர இடமுண்டு.

13. கேள்வி: (மகாதேவன் - காவனூர்) ஒரு இந்து விவசாயி தம் நிலங்களை 1919 ல் ரூ. 800 க்குப் போக்கியம் வைத்து, வேறு ஒரு இந்து விவசாயியிடம் கடன் பெற்றிருக்கிறார். போக்கியம் வாங்கியவர் இறந்து விட்டார். இறந்தவருடைய குழந்தைகளும் இரண்டு தம்பிகளும் போக்கிய சொத்துக்களையும் சொந்தப் பட்டா சொத்துக்களையும் 1944- ல் வாய்மொழியாகப் பாகம் பிரித்துக் கொண்டு நாளது வரை அனுபவித்து வருகிறார்கள். போக்கிய சொத்தை மீட்க எவ்வளவு ரூபாய் கொடுக்கவேண்டும்?

பதில்: ஜாடா அசல் தொகையும் கொடுக்க வேண்டும். இந்தவாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதில் ஒரே சட்டம்தான்.

14. கேள்வி: (ராமசாமி - புதுப்பட்டி) ஒருவர் பல சொத்துக்களை அடமானம் (ஈடு) வைத்துக் கடன் வாங்கினர். ஈடு வைத்த இரண்டு மாதத்தில் அதில் ஒரு சொத்தை வேறு ஒருவருக்குச் சுத்தக்கிரயம் செய்து கொடுத்து விட்டார். ஈட்டுக்காரர் 6 வருடத்தில் ஈட்டின் பேரில் கோர்ட்டில் தாவா செய்து டிக்ரி வாங்கினர். பிறகு (அந்த டிக்ரிக் கடனைத் தீர்த்துக் கொள்வதாகக் கண்டு) எல்லா ஈட்டு சொத்துக்களையும் ஈடு வைத்தவரிடமே கிரயம் பெற்று விட்டார். முதலில் ஒரு சொத்தை மட்டில் கிரயம் வாங்கியவருடைய கிரயம் செல்லுமா அல்லது ஈட்டுக்காரர் வாங்கிய கிரயம் செல்லுமா?

பதில்: முதலில் கிரயம் வாங்கியவருடைய கிரயம் அச்சொத்துச் சம்பந்தப் பட்டவரையில் செல்லும். அதே சொத்தை மறுபடியும் விற்க ஈடு வைத்தவருக்குப் பாத்தியமில்லை. (ஆனால் ஈட்டு டிக்ரி கோர்ட் மூலம் நிறைவேற்றப்பட்டு ஏலம் போயிருந்தால், அதற்கு விரோதமாக முதலில் வாங்கிய கிரயம் செல்லாது. கேள்வியில் இருப்பது கோர்ட் ஏலம் அல்ல.)

15. கேள்வி: (ஷை) கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டில் மெம்பராக இருக்கும் ஒருவர் ஒரு அடிபிடி கிரிமினல் கேசில் சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு அபராதம் மட்டில் விதிக்கப்பட்டிருந்தால் அவர் பஞ்சாயத்துக் கோர்ட் மெம்பராக இருக்கலாமா?

பதில்: இருக்கலாம்.

16. கேள்வி: (சுப்பிரமணியம் - கைத்தியக் கோட்டை) தம் நிலங்களை வேறு ஒருவருக்கு ஈடாக வைத்து, கடன் வாங்கிய ஒருவர் இறந்து போய் விட்டார். அவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. இரண்டு ஆண்பிள்ளைகளும் சிங்கப்பூர் போய், அவர்கள் இருக்கிறார்களா, இறந்தார்களா என்று தெரியாமல் இருந்தது. இந்த நிலைமையில் ஈட்டுக்காரர் கோர்ட்டில் தாவா செய்து டிக்ரி பெற்று ஈட்டு சொத்துக்கள் கோர்ட் ஏலத்தில் விடப்பட்டன. ஈடு வைத்தவரின் பெண் (கலியாணமாகி விட்டது) தான்தான் வார்சு என்று ஏலத் தொகையைக் கோர்ட்டில் கட்டிச் சொத்தை மீட்டு அதை தன் அனுபோகத்தில் கொண்டு வந்தாள். பிறகு அவள் அதை முதலில் ஒருவருக்கு ஒத்திவைத்து, மறுபடி மற்றொருவருக்கு ரொக்ககிரயத்திற்கு விற்றுவிட்டாள். சிங்கப்பூர் போன இருவர்களும் இப்பொழுது திரும்பி வந்து விட்டார்கள். இவர்கள் மேற்படி சொத்தை மீட்கச் சட்டமுண்டா?

பதில்: சொத்துக்களைத் தம்முடைய சொந்தச் சொத்துக்களாகவே பாவித்து ஈடு வைத்தவருடைய பெண்ணும் அவளிடம் கிரயம் வாங்கியவரும் சேர்ந்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் அனுபவித்துவிட்டால், சிங்கப்பூர் போய் திரும்பிய மகன்களின் பாத்தியம் அற்றுப் போய்விடும். அப்படி 12 வருடங்கள் ஆகாவிட்டால் அம்மகன்கள் சொத்துக்களை மீட்க முடியும்.

17. கேள்வி: (களியண்ணன் — கருப்பட்டிப் பாளையம்) ஒருவர் தம் பெயரை மாற்றி வேறு ஒரு பெயர் வைத்துக்கொள்ள விரும்பினால், அதற்கான சட்டம் ஏதாவது இருக்கின்றதா?

பதில்: சட்டம் ஒன்றுமில்லை. ஆனால் பெயரை மாற்றுவது பற்றி கெஜட்டில் விளம்பரம் செய்து கொள்வது நல்லது.

தொழிலாளர் பகுதி

குறைந்தபட்சச் சம்பளச் சட்டம் (1948)

(1—1—1951 முதல் சில தொழில்களுக்கு அமுலுக்கு வருவது கவனிக்கவும்)

பலவகைப்பட்ட தொழில்களில் வேலை செய்யும் பாட்டாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்கள் வேலை செய்து வரும் சூழ் நிலையைச் சீர் செய்யவும் சமீப காலங்களில் பல சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுள் ஒன்று 1948ல் இயற்றப்பட்ட "குறைந்த பட்சச் சம்பளச் சட்டம்"—(The Minimum Wages Act—1948) என்ற மத்திய சட்டம். இது 15-3-1948ல் சட்டமாயிற்று.

சில தொழில்களுக்கு மட்டில் இச்சட்டம்

இச் சட்டத்தில் சில தொழில்கள் தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அத்தொழில்களில் வேலை செய்யும் வெவ்வேறு வகைப்பட்ட தொழிலாளர்களில் ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சமாக எவ்வளவு சம்பளம், முதலாளியால் கொடுக்கப் படவேண்டுமென்று சர்க்கார் நிர்ணயம் செய்வார்கள். சில தொழிலாளர்களின் சம்பளத்தை மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்வார்கள். அதாவது ரயில்வே, சுரங்கம், எண்ணெய் வயல், பெரிய துறைமுகம் இவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் சம்பளத்தை மத்திய சர்க்கார் ஏற்படுத்துவார்கள். இச் சட்டத்தில் கண்ட மற்ற எல்லாத் தொழில்களிலும் வேலைசெய்து வரும் தொழிலாளர்களின் குறைந்தபட்சச் சம்பளத்தை அந்தந்த ராஜ்ய சர்க்காரே நிர்ணயம் செய்ய வேண்டும். இச் சட்டத்தின் ஜாப்தாவில் குறிப்பிடப் பட்டிருக்கும் தொழில்களில் வேலை செய்பவர்களுக்கு, சட்டத்தேதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள், அதாவது 15-3-1951க்குள் இவ்விதம் கட்டாயமாகச் சம்பள நிர்ணயம் செய்யவேண்டியது சர்க்காரின் கடமை. இச் சட்ட ஜாப்தாவில் குறிப்பிடப்படாத மற்ற தொழில்களுக்கும் இச்சட்டத்தை உபயோகப் படுத்தச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

முதலில் இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொழில்கள் எவை என்று கவனிப்போம். அவைகளின் விவரம்:—

1-ஆவது பாகம்:—(1) கம்பளி, கம்பளங்கள் உற்பத்தித் தொழில் (2) அரிசி (ரைஸ்) மில், மாவுமில், பருப்பு மில் (3) பீடி செய்வதுள் பட புகையிலை சம்பந்தப்பட்ட தொழில்கள் (4) சின்கோனா, ரப்பர், தேயிலை, காபித் தோட்டங்கள் (5) எண்ணெய் மில் (6) ஸ்தலஸ்தாபனங்களின் கீழ் வேலை (7) ரோட், கட்டடவேலை (8) கல் உடைக்கும் வேலை (9) அரக்கு வேலை (10) மைகா வேலை (11) பொதுப் போக்கு வரத்து மோட்டார் ஸ்தாபனங்கள் (12) தோல் பதனிடுவதும் தோல் சம்பந்தமான உற்பத்தி வேலையும்.

2-ஆவது பாகம்:—விவசாய வேலைகள்: அதாவது சாகுபடி, உழவு, அறுவடை தோட்ட வேலை, கால் நடை பரா மரிப்பு; கால் நடை, தேனீ, கோழி வளர்த்தல்; மரம் வெட்டுவது; விவசாயச் சாமான்களையும் மரச்சாமான்களையும் கிடங்குகளுக்கோ, மார்கெட்டுகளுக்கோ கொண்டுபோய்ச் சேர்ப்பது - முதலிய விவசாய சம்பந்தமான எவ்வித வேலைகளும் உள்பட.

மேற்கண்டவைகள்தான் இப்பொழுது சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் இச்சட்டத்தில் 27ஆவது செக்ஷன்படி வேறு வகைத் தொழில்களையும் 1 ஆவது ஜாப்தாவிலோ, 2ஆது ஜாப்தாவிலோ சேர்க்க சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அப்படிச் சேர்க்கப்பட்ட விபரம் கெஜட்டில் பிரசுரமாகும். புதிதாகச் சேர்க்கப் பட்ட தொழில் 1ஆவது பாகத்திலிருந்தால், கெஜட் விளம்பரத் தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள்ளும்; புதிதாகச் சேர்க்கப்படும் தொழில் 2ஆவது பாகத்தில் சேர்க்கப் பட்டால், மூன்று வருடங்களுக்குள்ளும், அந்தந்தத் தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, சர்க்கார் குறைந்த பட்சச் சம்பளத்தை நிர்ணயம் செய்யவேண்டும்.

சம்பள நிர்ணயம்:—இச் சட்டத்தில் கண்ட ஒரு தொழிலில் வேலை செய்யும் ஒவ்வொருவகைத் தொழிலாளருக்கும் குறைந்த பட்சமாக எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று சர்க்கார் நிர்ணயம் செய்து, அதைச் சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் செய்வார்கள். அச்சம்பள நிர்ணயம் எந்தத் தேதி முதல் அமுலுக்கு வருமென்றும் அதிலேயே குறிப்பிடலாம். தேதி குறிப்பிடப்படா விட்டால், சம்பள நிர்ணயம் கெஜட்டில் பிரசுரமான தேதியிலிருந்து மூன்று மாதம் சென்றதும் அது அமுலுக்கு வரும். இவ்விதம் சம்பள நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு (1) அச்சம்பளத்திற்குக் குறையாமல் அந்தத் தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்க, முதலாளி கடமைப் பட்டிருக்கிறார்-செக்ஷன் 12 (2) இவ்விதம் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறைவாக வாங்கிக்கொண்டு வேலை செய்வதாக ஒரு தொழிலாளர் சம்மதித்து ஒப்புக்கொண்டிருந்தாலும் அது செல்லாது. இச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் ஒப்புக்கொண்டிருந்தாலும் பிந்தி ஒப்புக்கொண்டிருந்தாலும் செல்லாது.—செக்ஷன் 25 (3) இச் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறைவாக ஒரு தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்கப் பட்டிருந்தால், ஆறு மாதத்திற்குள் இதற்காகச் சர்க்கார் நியமிக்கும் தனி அதிகாரியிடம் (Authority) மனுக் கொடுக்கலாம். ஒரு நீதிபதியையோ, மாஜிஸ்ட்ரேட்டையோ, தொழிலாளர் சம்பள நஷ்ட ஈடு கமிஷனரையோ இதற்கான 'அதிகாரி'யாகச் சர்க்கார் குறிப்பிடலாம். குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்டதென்ற மனுவைத் தொழிலாளரே தாகல் செய்யலாம்; அல்லது வக்கீலோ, தொழிலாளர் சங்கப் பிரதிநிதியோ, அல்லது இச் சட்ட இன்ஸ்பெக்டரோ, அல்லது 'அதிகாரி'யால் அனுமதிக்கப்பட்ட எவரும் இம்மனுவைக் கொடுக்கலாம். ஆறு மாதம் ஆகிவிட்டாலும் அதிகாரிக்கு மனுவை ஏற்றுக்கொள்ள உரிமை உண்டு. அதிகாரி, முதலாளியை விசாரித்து, உண்மையில் குறைவான சம்பளம் கொடுக்கப் பட்டிருந்தால் அத் தொகையை அந்தத் தொழிலாளருக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்வார். அத்துடன் தொழிலாளிக்கு நஷ்ட ஈடாக ஓர் தொகையையும் கொடுக்கும்படி உத்தரவிடலாம். இந்த நஷ்ட ஈடு என்பது, எவ்வளவு சம்பளம் குறைக்கப் பட்டதோ அதைப்போல் பத்து மடங்குவரை இருக்கலாம். ஆனால் வேண்டுமென்றோ, முதலாளியைத் துன்புறுத்தவோ, பொய்யாக இவ்விதம் மனுக் கொடுத்தால், மனுக் கொடுத்தவர் ரூ. 50 வரை முதலாளிக்கு அபராதமாகக் கொடுக்கும்படியும் உத்தரவிடலாம். இந்த அதிகாரியின் தீர்ப்புப்படி கொடுக்க வேண்டிய எந்தத் தொகையும் ஒரு மாஜிஸ்ட்ரேட்டால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையைப்போல் வசூலிக்கப்படும். இவ்விதம் 'அதிகாரி'யால் செய்யப்பட்ட தீர்ப்பு முடிவானது. இவ்விதமான சம்பளக் குறைவின் சம்பந்தமாய் விசாரிக்கச் சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கிடையாது-செக்ஷன் 20; 24. (4) அத்துடன் இச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறைவாகக் கொடுப்பது ஒரு குற்றம். ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். ஆனால் சம்பளக் குறைவு பற்றி முன் சொல்லப்பட்ட அதிகாரியிடம் மனுக் கொடுக்கப் பட்டு, அந்த அதிகாரியும் சம்பளம் குறைவாகக் கொடுக்கப்பட்டதென்று தீர்மானம் செய்த வழக்குகளில், அதே அதிகாரி இது சம்பந்தமாய் கிரிமினல் வழக்கும் தொடரலாம் என்று அனுமதி கொடுத்தால் மட்டில் கிரிமினல் கேஸ் கொடுக்கலாம். அனுமதித்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கிரிமினல் வழக்குத் தொடர வேண்டும். இச் சட்ட இன்ஸ்பெக்டர் அல்லது அவருடைய அனுமதி பெற்றவர்தான் கிரிமினல் வழக்குத் தொடங்க முடியும்-செக்ஷன் 22.

சர்க்கார் எப்படிக் குறைந்த பட்சச் சம்பளத்தை நிர்ணயம் செய்வார்கள்:—

இதற்காக ஆலோசனைக் கமிட்டிகள் நியமித்தோ அல்லது சர்க்காரே தாங்கள் நிர்ணயிக்கப் போகும் சம்பள விகிதத்தைக் கெஜட்டில் பிரசுரம் செய்து பொது மக்களின் ஆட்சேபனைகளைக் கேட்டோ, முடிவாக ஒவ்வொரு தொழிலுக்கும் குறைந்த பட்சச் சம்பளம் நிர்ணயம் செய்வார்கள். ஒரு தடவை சம்பளம் நிர்ணயம்

செய்யப்பட்டாலும், ஐந்து வருடங்களுக்குள் பட்ட கெடுக்களில் மறுபடியும் அதைப் பரிசீலனை செய்து மாற்றிக்கொண்டேயும் இருக்கலாம். சம்பள நிர்ணயம் செய்வது பல வகையாக இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு ஒரு தொழிலாளர் வேலை செய்தால் அதற்குக் குறைந்த பட்சச் சம்பளம் எவ்வளவு என்றோ (a minimum time rate); அல்லது எவ்வளவு அளவு வேலையைச் செய்தால் எவ்வளவு சம்பளம் என்றோ (a minimum piece rate); அல்லது இரண்டும் கலந்து; அதாவது செய்யும் வேலைக்குச் சம்பளம், ஆனாலும் குறைந்தது எவ்வளவு கொடுக்கவேண்டுமென்றோ (a guaranteed time rate); அதிக நேர வேலைக்குக் குறைந்த பட்சச் சம்பளம் என்ன என்றோ (overtime work) சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படலாம். சம்பளம் நிர்ணயம் செய்யும் போதோ, அதை மாற்றும் போதோ, எல்லா வேலைகளுக்கும், எல்லா இடங்களுக்கும் ஒரே விதமாகச் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்பதில்லை. அந்தந்த இடத்திற்குத் தக்கவாறும், வெவ்வேறு தொழில்களுக்கு வெவ்வேறாகவும், ஒரே தொழிலில் வெவ்வேறு வேலைகளுக்கு வெவ்வேறு சம்பளமாகவும், வயது வந்தவர், சிறுவர், குழந்தை, வேலை கற்றுக் கொள்பவர் — ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சம்பளமாகவும் நிர்ணயம் செய்யச் சர்க்காருக்கு உரிமை உண்டு. மேலும் அடிப்படையான ஒரு சம்பள விகிதத்தை (basic rate of wages) யும், வாழ்க்கைச் செலவுக்குத் தகுந்தவாறு மாற்றி மாற்றிக் கொடுக்கப்பட வேண்டியதாக ஒரு விசேஷ சம்பளத்தையும் (cost of living allowance) நிர்ணயம் செய்யலாம். அத்துடன் அவசியமான பண்டங்களைக் குறைந்த விலையில் தொழிலாளருக்குக் கொடுக்கப்பட வேண்டுமானால் அதனால் ஏற்படும் சலுகைக்கும் ஒரு ரொக்க மதிப்பு நிர்ணயிக்கலாம். அவசியமானால் சம்பளத்திற்குப் பதில் பண்டங்களாகக் கொடுக்கும் வழக்கம் இருக்கும் வேலைகளில், அவ்வித சம்பளத்தையும் நிர்ணயம் செய்யலாம். அல்லது எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரே சம்பள விகிதமாகவும் நிர்ணயம் செய்யலாம். இவ்விதம் சம்பள நிர்ணயம் செய்யவும் அதை மறுபடி மாற்றி அமைக்கவும் தேவையான ஆலோசனைக் கமிட்டிகள் நியமிக்கப்படும். ஒரு தடவை நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்சச் சம்பளத்தை மாற்று முன் இக் கமிட்டிகளைச் சர்க்கார் கலந்து கொள்ள வேண்டும்.

வேலை நேரம்:—இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொழில்களுக்கு, தொழிலாளர்கள் தினசரி செய்யவேண்டிய வேலை நேரத்தையும், வார விடுமுறையையும், அதிக வேலை நேரத்தையும் சர்க்கார் ஒழுங்கு படுத்தலாம். ஒரே தொழிலாளர் வெவ்வேறு சம்பள விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட இரண்டு வகை வேலைகளைச் செய்தால் அந்தந்த வேலைக்குள்ள குறைந்தபட்சச் சம்பளம் (மணிக் கணக்குப்படி வீதாசாரம் செய்யப்பட்டு) அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

ரிஜிஸ்டர்கள்:—தொழிலாளர்கள் யார் யார் வேலை செய்தார்கள் என்றும், என்ன வேலை செய்தார்கள் என்றும், எவ்வளவு சம்பளம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டதென்றும், காண்பிக்கக் கூடிய ரிஜிஸ்டர்கள் ஒவ்வொரு முதலாளியாலும் வைத்துக்கொள்ளப்படவேண்டும். இதற்காக ஏற்படும் விதிகளை அனுசரித்து இந்த ரிஜிஸ்டர்கள் வைத்துக் கொள்ளப்பட வேண்டும். ரிஜிஸ்டர்கள் வைத்துக் கொள்ளாதது இச் சட்டப்படி ஒரு குற்றம். ரூ. 500 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

இன்ஸ்பெக்டர்கள்:—இச் சட்டத்தை அமுல் நடத்த இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் தொழில் நடக்கும் எந்த இடத்திற்கும் போய்ச் சோதனைகள் செய்யலாம். விசாரணை செய்யலாம். ரிஜிஸ்டர்களைப் பார்வையிடலாம். இன்னும் இன்ஸ்பெக்டர்களுக்குப் பல அதிகாரங்கள் உண்டு. முக்கியமாகத் தொழிலாளருக்காக இவர் தாவா தொடங்கலாம். மேலும் இன்ஸ்பெக்டருடைய அனுமதியின் பேரில்தான் கிரிமினல் வழக்குகள் தொடங்கவேண்டும்.

குறைந்தபட்சச் சம்பளச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து, சென்னைச் சர்க்காரால் கீழ்க்கண்ட தொழில்களில் வேலையில் அமர்ந்திருப்பவர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இவை 1—1—1951 முதல் அமுலுக்கு வரும்.

எண்ணெய் ஆலையில் வேலையில் அமர்ந்திருப்பவர்களுக்கு

வேலையாட்களின் வகை. (1)	அன்றாடக்குறைந்தபட்சக் கூலி விகிதங்கள். (2)		
	ரூ.	அ.	பை
தச்சர்கள்	1	8	0
பிண்ணாக்குக்கொண்டு போகிறவர்கள்	1	0	0
மஜ்தூர்	1	0	0
மின்சார வேலைக்காரர்கள்	1	10	0
எஞ்சின் டிரைவர்கள்	1	12	0
எக்ஸ்பெல்லர் மேஸ்திரிகள்	1	12	0
பைர்மன்கள்	1	4	0
பிட்டர்கள்	1	4	0
பில்டர்மன்கள்	1	2	0
ஆயிலர்கள்	1	2	0
ப்ரெஸ்மன்கள்	1	4	0
தோட்டிகள்	0	12	0
காவல்காரர்கள்	1	0	0

(7-10-1950 தேதியுள்ள G. O. 4079)

அரிசி மில், மாவு மில் அல்லது பருப்பு மில் எதிலேனும் வேலையிலமர்ந்திருப்பவர்களுக்கு

வேலையாள்களின் வகை (1)	குறைந்தபட்ச அன்றாடக் கூலி விதம் (2)		
	ரூ.	அ.	பை
அமலிகள் அல்லது காட்டா மஜ்தூர்	1	4	0
பை தைப்பவர்கள்	1	4	0
பை எடைபோடுபவர்கள்	1	5	0
உமி கொண்டுபோகிறவர்கள்	1	0	0
அரிசி கொண்டுபோகிறவர்கள்	1	0	0
மஜ்தூர் (பலவகைப்பட்ட வேலையாட்கள் உள்பட)	1	0	0
என்ஜின் டிரைவர்கள்	1	12	0
மின்சார வேலைக்காரர்கள்	1	10	0
பயர்மன்கள்	1	4	0
பிட்டர்கள்	1	4	0
உமி நீக்குபவர்கள்	1	2	0
மெக்கானிக்குகள்	1	8	0
மேஸ்திரிகள்	1	4	0
ஆய்லர்கள்	1	2	0
நெல் வேக வைப்பவர்கள்	1	2	0
நெல் உலர்த்துபவர்கள்	1	2	0
நெல்லை யந்திரத்திலிட்டுதீட்டுபவர்கள்	1	2	0
நெல் ஊறவைப்பவர்கள்	1	2	0
தோட்டிகள்	0	12	0
தோல், ஓடு முதலியவற்றை நீக்குபவர்கள்	1	2	0
தூற்றுகிறவர்கள்	0	12	0
தண்ணீர் கொண்டுபோகிறவர்கள்	0	12	0
காவற்காரர்கள்	1	0	0

(9—10—1950 தேதியுள்ள G. O. 4112)

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

(1950) ஜீனி வெல்லக்கட்டுப்பாடு உத்தரவு—வெல்லத்தின் விலை

மத்திய சர்க்காரால் 25—10—50ல் வெல்லச் சரக்குக்கு (Gur) உச்ச விலை நிர்ணயம் செய்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு, புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்புது உத்தரவின்படி $82\frac{2}{7}$ பவுண்டு கொண்ட ஒரு மணு வெல்லத்தின் உச்சவிலை சென்னை ராஜ்யத்தில் ரூ. 19-ஆக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. (மைசூர் ராஜ்யத்தில் உச்சவிலை ரூ 22. மற்ற எல்லா ராஜ்யங்களுக்கும் தனித்தனி விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.)

இன்னும் விலையை உயர்த்த அதிகாரிகள்:— இவ்விதம் மத்திய சர்க்காரால் உச்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்படி கட்டுப்பாடு உத்தரவின் 6-வது கிளாஸில் கண்ட விலை நிர்ணய அதிகாரம் மத்திய சர்க்காரால் எந்த எந்த அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அதிகாரிகள், குறிப்பிட்ட இடங்களுக்கும் அல்லது குறிப்பிட்ட ரகங்களுக்கும் இன்னும் அதிகமான உச்ச விலையை நிர்ணயிக்கலாம். ஆனால் அவர்கள் மத்திய சர்க்காரின் அனுமதி பெற்றுக் கொண்டு இவ்விதம் வேறு உச்ச விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(S. R. O 1000. இந்தியா கெஜட்—2—12—1950 விசேஷ வெளியீடு — பாகம் II செக்ஷன் 3 - பக்கம் 967)

[குறிப்பு:—ஜீனி வெல்லச் சரக்கு இவைகளுக்கு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் (கிளாஸ் 6ன்படி) சென்னை சிவில் சப்ளை கமிஷனருக்கும், அந்தந்த ஜில்லாக்களில் ஜில்லா கலெக்டர்களுக்கும் ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிறது. 19—10—1950 இந்தியா கெஜட் பார்க்கவும். 1950 "வக்கீல்" டிசம்பர் இதழ் பக்கம் 22ல் இந்த உத்தரவு விளக்கப்பட்டிருக்கிறது.]

பனைவெல்லம் கண்ட்ரோல் ரத்து:— (Sugar and Gur Control order 1950) இக்கட்டுப்பாடு உத்தரவில் 'வெல்லச்சரக்கு' என்பதில் ஏற்கனவே பனைவெல்லமும் அடங்கியதாகக் கண்டிருந்தது. இப்பொழுது 'வெல்லச் சரக்கு' (Gur) என்பதில் பனைவெல்லம் சேராதென்று திருத்தப் பட்டிருக்கிறது. ஆகையால் பனைவெல்லத்திற்கு இக்கட்டுப்பாடு உத்தரவு கிடையாது.

(5—12—1950 - சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II ரூல் சப்ளிமெண்ட்—பக்கம்-176]

பிரயாணிகள் கையுடன் எடுத்துச் செல்லக்கூடிய ஜீனி அளவு:— ஜீனி வெல்லக் கட்டுப்பாடு உத்தரவின் 5ஆவது கிளாஸ்படி ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு ஒருவரும் ஜீனி வெல்லச்சரக்கு முதலியவற்றைப் பர்மிட் இல்லாமல் எடுத்துச் செல்லக்கூடாதென்று சர்க்கார் உத்தரவுகள் பிறப்பிக்கலாம். அவ்வித உத்தரவுகள் பிறப்பித்தாலும், பிரயாணம் செய்பவர்கள் கையுடன் 5 சேர் வரை ஜீனி எடுத்துப்போக யாதொரு பர்மிட்டும் வேண்டியதில்லை என்று இருந்ததை மாற்றி, பிரயாணிகள் ஒரு சேர் வரைதான் பர்மிட்டில்லாமல் கையுடன் கொண்டுபோகலாமென்று இந்த ஷரத்துத் திருத்தப்பட்டிருக்கிறது.

(5—12—1950-சென்னை சர்க்கார்—செஜட்—பாகம் II ரூல் சப்ளிமெண்ட்—பக்கம்-176)

(1950ஆம் வருடத்திய) சரக்கு சப்ளை விலை அவசரச் சட்டத்தின் கீழ் உத்தரவுகள்

தோல் கிடங்குகளில் எடுக்கப்படும் ஆட்டு ரோமம்:— தோல் பதனிடுவதற்கு முன்பு தோல் கிடங்குகளில் எடுக்கப்படும் ஆட்டு ரோமத்திற்கும் இந்த அவசரச்சட்டம் இனி பொருந்தும்.

(S. R. O. 963. இந்தியா கெஜட் 23—11—1950-விசேஷ வெளியீடு - பாகம் II செக்ஷன் 3 - பக்கம் 949)

ஆட்டு ரோமத்தை அனுப்ப பர்மிட் :— சென்னை ராஜ்யத்திலும் மைசூர் ராஜ்யத்திலும் உள்ள தோல் கிடங்குகளில் எடுக்கப்படும் (கம்பள) ரோமத்தை பெங்களூர், வாலாஜா, சேலம் இந்த மூன்று இடங்களைத்தவிர வேறு எந்த இடங்களுக்கு ரயில், ரோடு, படகு, அல்லது ஆகாயவிமானம் எது மூலமாக அனுப்ப வேண்டுமானாலும், சென்னை டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அல்லது மைசூர் டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் என்ற அதிகாரியின் பர்மிட் வேண்டும்.

(S. R. O. 964. இந்தியா — கெஜட் — 23—11—1950-விசேஷ வெளியீடு—பாகம் II செக்ஷன் 3- பக்கம் 949)

சைக்கிள் பாகங்கள், 'ஆஸ்டர்மில்க்' பால் புட்டி :—இவை இரண்டும் சரக்கு சப்ளை—விலை அவசரச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. (S. R. O. 966)

'ஆஸ்டர்மில்க்' விலை :-அந்த வியாபாரி தொழில் நடத்தும் வட்டாரத்தில் 15-6-1950 தேதியில் என்ன விலையோ அதற்குமேல் விற்கக்கூடாது. ஒருவருக்கு ஒரு தடவையில் ஒரு டின் அல்லது ஒரு புட்டிதான் விற்கலாம்; ஆஸ்பத்திரிகளுக்கும், பிரசவ விடுதிகளுக்கும் சிசு அல்லது திக்கற்ற குழந்தைகளின் போஷணை விடுதிகளுக்கு மட்டில் நிர்வாகஸ்தரின் சர்டிபிகேட்டின் பேரில் ஒரு மாதத்திற்குத் தேவையான அளவு கொடுக்கலாம்; வியாபாரிகளுக்கு, அவர்களிடம் உறுதிமொழி எழுதி வாங்கிக்கொண்டு, மூன்று மாத வியாபாரத்திற்குத் தேவையான அளவுக்குமேல் விற்கக் கூடாது. ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று விலை ஜாப்தா ஒன்று கடையில் விளம்பரப்படுத்த வேண்டும்; அத்துடன் கையிருப்பு ஸ்டாக் எவ்வளவு என்றும் விளம்பரப் படுத்த வேண்டும்.

(S. R. O. 967 — இந்தியா — கெஜட் — 23—11—1950- விசேஷ வெளியீடு—பாகம் II செக்ஷன் 3- பக்கம் 950)

கணக்கு அனுப்பவேண்டியது:-(1) பை சைக்கிள், சைக்கிள் பாகங்கள் (Bicycle parts and accessories) (2) சைக்கிள் டயர், ட்யூப் (3) சிசு ஆகாரங்கள்- —கிளாக்ஸோ, ஹார்லிக்ஸ், கௌ அண்ட் கேட், ஆஸ்டர் மில்க் (4) எலெக்ட்ரிக்பல்புகள்—இவைகளில் வியாபாரம் செய்பவர்கள் ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் கையிருப்பு 'ஸ்டாக்' எவ்வளவு என்று கண்ட கணக்கை அடுத்தமாதம் 15 தேதிக்குள் இந்திய சர்க்காருக்கு அனுப்பவேண்டும். (Government of India, Ministry of Industry and Supply, New Delhi)—என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். ராஜ்பசர்க்காருக்கோ அவர்களால் குறிப்பிடப்படும் அதிகாரிக்கோ அதன் நகல் அனுப்பவேண்டும். முதல் கணக்கு அனுப்ப வேண்டியது 15-12-1950.

(S. R. O. 979- இந்தியா கெஜட் 2-12-1950 பாகம் II -செக்ஷன் 3-பக்கம் 1019)

பித்தளை - முதலிய இரும்பு சம்பந்த மல்லாத உலோகங்கள் :- இரும்பு சம்பந்த மல்லாத பித்தளை முதலிய உலோகச் சாமான்களை உற்பத்தி செய்பவர்களிடமும் வியாபாரிகளிடமும் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் 5 டன் அல்லது அதற்குமேல் கையில் சரக்கு இருந்தால், 'ஸ்டாக்' விபரத்தை எழுத்து மூலம் அந்த மாதம் 15 தேதிக்குள், இந்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும். (Ministry of Industry and Supply, Government of India, New Delhi—என்ற விலாசத்திற்குத் தெரிவிக்க வேண்டும்) அதன் நகல் ஒன்றை ராஜ்ய சர்க்காருக்கோ அவர்களிடம் அனுமதி பெற்ற அதிகாரிக்கோ அனுப்ப வேண்டும். இது 1-12-1950 முதல் அமுலுக்கு வந்து விட்டது.

(25—11—1950. — இந்தியா கெஜட் — விசேஷ வெளியீடு — பாகம் II - செக்ஷன் 3 - பக்கம் 955.)

தோல் பதனிடும் சரக்குகள் :- மேற்படி சரக்குகளை உற்பத்தி செய்பவர்களும், வியாபாரிகளும், ஒவ்வொரு இங்கிலீஷ் மாதக் கடைசித் தேதியில் தம் கையில் உள்ள சரக்கு 'ஸ்டாக்' எவ்வளவு என்று அடுத்தமாதம்

187703
600 008

15-ம் தேதிக்குள் டைரெக்டர் ஜெனரல் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு சப்ளைஸ், புது டில்லி (Director General of Industries and Supplies, New Delhi) என்ற விலாசத்திற்கு விபரம் கண்டு தெரிவிக்கவேண்டும். இது 15-12-1950 முதல் அமுலுக்கு வந்துவிட்டது.

(25—11—1950 — இந்தியா கெஜட் — விசேஷ வெளியீடு—பாகம் II செக்ஷன் 3-பக்கம் 955.)

உணவு தானியங்கள்

'லெவி' கொள்முதல் உத்தரவு ரத்து. கோயமுத்தூர் ஜில்லாவில் மட்டும் அமுலில் இருந்த 'லெவி' கொள்முதல் உத்தரவு 11—12—1950-ல் ரத்து செய்யப்பட்டது. இனி கோயமுத்தூர் ஜில்லாவில் சென்னை உணவு தானியத் தீவிரக் கொள்முதல் உத்தரவு அமுலில் இருக்கும.

(11-12-1950—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II—விசேஷ வெளியீடுகள்)

அவல், பொரி:—அத்தியாவசியப் பொருள்களை அதிகமாக வைத்திருப்பதைத் தடை செய்யும் 1947 ஆம் வருடத்திய சென்னை கண்ட்ரோல் உத்தரவில் (Essential Articles Restricted Acquisition Order—1947) அரிசி அலலது நெல்லிலிருந்து செய்யப்படும் அவல், பொரி அரிசிப்பொரி, நெல் பொரி, முதலியவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(28—11—1950-சென்னை-சர்க்கார் கெஜட்-பாகம் II-ருல் சப்ளிமெண்ட்—பக்கம் 173)

ஷாப் சட்டம் பொங்கல் விதிவிலக்கு

சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லாக் கடைகளுக்கும் 7-1-1951 முதல் 10 நாட்களுக்கு, பொங்கல் பண்டிகைக்காக, ஷாப் சட்டத்தின் இரண்டு விதிகளிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது தினசரி எந்த மணிக்கு முன், ஓர் கடையைத் திறக்கக் கூடாதென்றும், எந்த மணி நேரத்திற்குப் பின் திறந்துவைத்திருக்கக் கூடாதென்றும் இருக்கும் விதி - செக்ஷன் 7 (1), கடைகள் வாரத்தில் ஒரு தினம் மூடப்படவேண்டும் என்ற விதி செக்ஷன் 11 (1) —இவை இரண்டு விதிகள் மட்டில் கிடையாது.

(5—12—1950-சென்னை-சர்க்கார் கெஜட்-பாகம் II—பக்கம் 1639)

வனஸ்பதி கண்ட்ரோல்: சென்னை ராஜ்ய அதிகாரிகள்

1947 ஆம் வருடத்திய வனஸ்பதி கட்டுப்பாடு உத்தரவின் 8-A பிரிவின்படி வனஸ்பதி கண்ட்ரோலருக்குள்ள அதிகாரங்களைச் சென்னை ராஜ்யத்திலுள்ள கீழ்க்கண்ட அதிகாரிகளும் அவரவர் அதிகார எல்லைக்குள் செலுத்தலாம்:- அதிகாரிகள் விவரம்:—(1) ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள், தாசில்தார்கள், டிப்டி தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், ஜில்லா சப்ளை ஆபீசர்கள், தாலூக்கா சப்ளை ஆபீசர்கள் (2) கமர்சியல் டாகஸ் ஆபீசர்கள், டிப்டி கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்கள், அசிஸ்டெண்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்கள் (3) டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ், ஜாயிண்ட் டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ், டிஸ்டிரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் ஆபீசர், சூபர்வைஸர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் (4) பொதுச் சுகாதார டைரெக்டர், அசிஸ்டெண்ட் டைரெக்டர் ஹெல்த் ஆபீசர்கள், இன்ஸ்பெக்டர்கள்.

(28—11—1950-சென்னை-சர்க்கார் கெஜட்-பாகம் II-பக்கம் 1568)

PRINTED BY N. RAMARATNAM, M.A, B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor*:— V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

அடுத்துவரும் இதழ்களில்

ஹிந்து சட்ட மசோதா

ஹிந்துச் சட்டத்தில் பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்ய, மத்திய சர்க்காரால் இந்திய யூனியன் பார்லிமெண்டில் ஓர் மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இம்மசோதாவின் விவரம் 1950 ஜனவரி "வக்கீல்" இதழில் விளக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு, பொறுக்குக் கமிட்டியால் சில மாறுதல்கள் செய்யப்பட்டு, மசோதா இப்பொழுது, டில்லி பார்லிமெண்டில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. கூடிய சீக்கிரம் இது சட்டமாகலாம். முக்கியமாக பிரிபடாத ஏக குடும்பம் என்பது போய் விடும். பெண்மக்களுக்கும் வார்சு உரிமை கிடைக்கலாம்; ஸ்திரீகள் அடையும் சொத்துக்களை அவர்கள் விற்கச்சட பாத்தியம் ஏற்படலாம்; வார்சுக் கிரமம் மாறலாம்; சுவீகார விதிகள் தளர்த்தப் படலாம். தாம்பத்திய உரிமை, விவாக ரத்து முதலியவை சம்பந்தமாயும் பல மாறுதல்களும் ஏற்படலாம். கோடிக்கணக்கான இந்திய மக்களின் வாழ்க்கையையும், சொத்து உரிமைகளையும், பாத்தியங்களையும் மாற்றக் கூடிய இச்சட்டத்தின் நுட்பங்களை நேயர்கள் "வக்கீல்" இதழ்களின் மூலம் அவ்வப்பொழுது தெரிந்து கொள்ளலாம். புத்தக வடிவமாயும் வெளியிடப்படும்.

சென்னை
ஹிந்துமத - தர்ம ஸ்தாபனச் சட்டம்.

சென்னைச் சட்ட சபைகளில் பலத்த விவாதத்தில் இருந்த இம்மசோதாவும், கூடியசீக்கிரமே சட்டமாகலாம். இச்சட்டத்தைப்பற்றி பலமான கட்சிப் பிரதிக் கட்சிகள் இருப்பதால் மதசுதந்தரத்தைப் பொருத்த இவ்விதச் சட்டம் இயற்றவே, ராஜ்ய சட்ட சபைகளுக்கு உள்ள அதிகார வரம்பு என்ன என்றும் உயர் நீதிமன்றங்களின் அபிப்பிராயங்களும் கோரப்படலாம். இரண்டு கட்சிகளாலும் அளிக்கப்படும் சட்ட நுட்பங்கள் அடங்கிய ஓர் விருந்தை "வக்கீல்" நேயர்களும் ருசி பார்க்கலாம்.

விற்பனை வரிச் சட்டத்திருத்த மசோதா.

சென்னை சர்க்காரால் சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. விற்பனை வரி சம்பந்தமான முடிவான அப்பீல்களை விசாரிக்க ஒரு தனி நியாய சபை அதாவது 'அப்பீல்ட்ரிபுனல்' (Appellate Tribunal) ஏற்படுத்தவும், அதற்குமேல் ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' அதிகாரம் கொடுக்கவும், இன்னும் சில சில்லரை திருத்தங்கள் செய்யவும் இம்மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்டமானதும் "வரிகள்" என்ற பகுதியில் இது விளக்கப்படும்.

Regd. No. M. 5399

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JAN
MADRAS

"வக்கீல்"

(பொது மக்களுக்கான)

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாதம் ஒரு முறை)

எளிய தமிழில், புதிது
புதிதாய் வரும் சட்டங்களையும்,
கண்ட்ரோல், ரேஷன், லைசென்ஸ், விலை
நிர்ணயம், வருமான வரி, விற்பனை வரி, ஷாப் சட்டம்
போன்ற பல சட்ட விஷயங்களையும் சுலப
மாயும் தெளிவாயும் அனைவரும் அவ்வப்
பொழுது தெரிந்து கொள்ளலாம்.

விசேஷ பகுதிகள்: வழக்கும் - தீர்ப்பும்; கேள்வி - பதில்
தொழிலாளர் பகுதி; அயல் நாடுகளில்

பிரதி இங்கிலீஷ் மாத முதல் தேதி வெளியாகும்

"வக்கீல்" 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.
"வக்கீல்" பிரசுரங்கள் (சப்ளிமெண்ட்கள்)
உள்பட விசேஷ வருட சந்தா ரூ. 5.
எல்லா சுதேசமித்திரன், ஹிக்கின்பாதம் ரயில்வே புக்ஸ்டால்
களிலும், பிரபல நியூஸ் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம். (தென் இந்தியா.)